[illegible] [illegible]

[illegible] 17 [illegible] 11

3L
R6mm2 11, N11VD
M27.12.11
136775

1740

பாலால்—முதல்தர வைர வியாபாரிகள்.

Regd. No. M. 916. 250, சைனுபஜார் ரோட், சென்னை.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

பிரபவ ஸ்ரீ - ஆவணிமீ.

ஸம்புடம் 17.] [ஸஞ்சிகை 11.]

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1927
MADRAS

விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதத்தின் ஸர்வலோகஹிதத்வம்:—
ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீ நிவாஸாசார்யர், பி. ஏ. பி. எல். ... .333
2. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரும் அவர்களின் கொள்கைகளும்:—
ஸ்ரீ உப. வித்வான் தட்டை ஸ்ரீ நிவாஸாசார்யர் ... 339
3. ந்யாஸ ரீதி—ஸ்ரீ உப. வித்வான் கிடாம்பி ராமாநுஜாசார்யர். ... 345
4. மடாதிபதிகளின் தர்மம் ... 353
5. கடிதங்கள் ... 355
6. ஸ்ரீ வை. ஸி. ஸபையின் அறிக்கை. ... 361
5. பத்ராதிபரின் குறிப்புகள். ... ... 331
6. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் ... 73
7. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:— ... ... 73

*AUGUST, 1927.*

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

மூளைக் கொதிப்பு! கபால உஷ்ணம்!!

இவற்றைத் தணிக்க ஆற்றலுள்ளது.

# அரக்கீரை விதைத் தைலம்

இந்த தைலம், சிறந்த மூலிகைச் சரக்குகளால் தயாரிக்கப்பட்டிருப்பதால் சிரசு நோய்களாகிய கபால உஷ்ணம், மூளைக்கொதிப்பு முதலியவைகளை நிவர்த்தித்து கூந்தலை வளரச்செய்வதுடன், தேகக்குளிர்ச்சியையும், உற்சாகத்தையும், ஞாபகசக்தியும் உண்டாக்கும். 6½-பலம் டின் ரூ. 1-0-0 10-பலம் டின் ரூ. 1-8-0

கடுங்கோடையினின்று தப்புவிக்க வேண்டுமானால், எங்கள்

# சந்தனாதித் தைலத்தை

உபயோகிக்கவேண்டும். இது பரிமளமுள்ளது. தலைமயிர் உதிர்தல், சுண்டு விழுதல் இவற்றைத்தடுக்கும். கண்ணெரிச்சலடங்கும். கபால உஷ்ணம் தணியும். மனோல்லாசமுண்டாகி, தேகக் குளிர்ச்சி ஏற்படும். 8-பலம் டின் ரூ. 1. 18-பலம் டின் ரூ. 2. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. இவையன்றி எங்களிடம் கலவைச் சந்தனம், காஜிப்பூர் பன்னீர், உயர்ந்த ஊதுவத்திகள், கேஸர்பவுடர், அத்தர், அரகஜா, பில்லைகள், பரிமளப் பாக்குத்தூள், சுண்ணாம்பு, இதர வாசனை த்ரவ்யங்களும் கிடைக்கும்.

**S. V. சாரி & சன்ஸ், அத்தர் வியாபாரிகள்,**

**71, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.**

# எல். என். ஜ்வல்லரி ஹவுஸ்

**1/11 நல்லதம்பி முதலித்தெரு,**

**திருவல்லிக்கேணி, சென்னை.**

## நம்பிக்கைக்குரித்தான
## நகை வியாபாரிகள்.

குறிப்பிட்ட காலத்தில் நயமாகவும் நேர்த்தியாகவும், தங்கம், வெள்ளி நகை சாமான்களும், கல்லிழைத்த நகைகளும் தயாரித்துக் கொடுக்கப்படும். திறமையான வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்படுவது. ஒருமுறை பரிக்ஷித்துக் கோருகிறோம்.

சொந்தக்காரர்:—

ராவ்ஸாகிப் பி. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார், பி. ஏ.

ரிடையர்டு ஸால்டு அஸிஸ்டெண்டு கமிஷனர்,

ஏஜண்டு, திருவல்லிக்கேணி அஹோபில மடம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவ ஹு, ஆவணி மீ [ஸஞ்சிகை 11

*த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தததாநே ।*
*வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥*
[ ஸ்ரீ பாகவதம், 1-9-23 ]

ஸ்ரீ:

## பகவத் ராமாநுஜ மதத்தின் ஸர்வலோக ஹிதத்வம்.

[ஸ்ரீ. உ.ப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் பி. ஏ., பி. எல்.]

186775

(தொடர்ச்சி 307-ம் பக்கம்.)

### ஸ்ரீ சங்கராசாரியர் உபதேசமும் இதுவே.

பரமார்த்த தசையில் ஜீவனும் ப்ருமமமும் ஒன்றென்றும் அந்த ப்ரும்மமும் நிர்க்குணம் என்றும் ஸ்ரீ சங்கராசார்யர் அபிப்ராயப்பட்ட போதிலும், முமுக்ஷு தசையில் உபாஸிக்கப்பட வேண்டிய பரதேவதை விஷ்ணுவென்றே அவர் தீர்மான மென்பது அவருடைய க்ரந்தங்களைப் பரிசயம் பண்ணினவர்களுக்கு நன்றாய் விளங்கும். ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் 'விஶ்வம் விஷ்ணு:' என்பதின் வ்யாக்யாநத்தில் 'விஶ்வ' சப்தத்துக்குக் கீழ்க்கண்டபடி ஸர்வ வ்யாபியாய் ஸர்வாதாரமா யிருக்கும் ப்ரும்மம் பொருளென்று வேதம், உபநிஷத், புராணம், முதலிய பல ப்ரமாணங்களை உபந்யஸித்து வ்யாக்யாநம் செய்துவிட்டு, 'அவர் யார் என்று கேட்டால் விஷ்ணு' 'ஸ ச உதி வருஷெ

விஷ்ணோ:' என்று அடுத்த சப்தத்தை விவரிக்கத் தொடங்கியிருக்கிறார். அத்வைத மத நிரூபணம் பண்ணும் விவேக சூடாமணி என்னும் க்ரந்தத்தில் யோகத்தால் பேத மோஹம் நீங்கி அத்வைத ப்ரும்ம ஜ்ஞாநம் வரும் தசையை விஷ்ணுவின் பரமபதம் “ யம் ஜிஜ்வா ஊநயொ யாதி தத்விஷ்ணோ: வரமம்பதம்” என்றருளினர். அப்படியே கடோபநிஷத்தில் ஸம்ஸாரமாகிற துலைவில்லாத மார்க்கத்துக்கு அக்கரையாகச் சொல்லும் (‘ஸொஅத்வந: வாரமா வ்நொதி தத்விஷ்ணோ:வரமம்பதம்’) விஷ்ணுவின் பரம பதத்துக்கு, வ்யாபிக்கும் தன்மையையுடைய வாஸுதேவனென விஷ்ணுவின் உயர்ந்த இடம் அதாவது ஸ்வரூபம் “ வ்யாவநபரிலவஸ்ய வாஸுதெவாவ்யஸ்ய விஷ்ணோ: வ்ரக்ருஷ்டம்ஸ்தாநம் ஸ்வரூவமிதியாவத்” என்று அர்த்தம் கூறினர். இதே மாதிரி ஸ்ரீவிஷ்ணு பாதாதி கேச ஸ்தோத்ரத்தில் பல ச்ருதி சொல்லுமிடத்தில் ‘இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பவர் ஸூர்ய பிம்ப மத்தியில் காணப்படும் பரமாநந்தமான ஆத்ம ஸ்வரூபத்தை ப்ரவேசிப்பார்’ “ஹாநொ பிம்பாந்தமெத்யாநந்தஸ்வாநந்த மாத்வ ஸ்வரூவம்” என்று முடித்தார். இப்படியே கீதா பாஷ்யத்தின் ஆரம்பத்திலும் ‘ஆதிகர்த்தாவாகிற நாராயணன் என்னும் பெயரையுடைய விஷ்ணுவே வஸுதேவர் வீட்டில் க்ருஷ்ணனாயவதரித்தார்’ [“ஸ ஸ்ருஷ்டிகர்த்தா நாராயணாவ்ய: விஷ்ணு: வஸுதெவ க்ருஹெ க்ருஷ்ண: கில ஸம்பபூவ ”] என்று உபக்ரமித்திருக்கிறார். இன்னும் பல விடங்களையும் காட்டலாம். அவருக்கு ஆராத்ய தேவதை ஸ்ரீலக்ஷ்மீ ந்ரஸிம்மனென்பதும் எல்லோரும் அறிந்த விஷயம்.

### ஸார்வ லௌகிக மதம் அபேக்ஷிக்கும் ஈச்வரன்.

இப்படி உபநிஷதாதிகளில் நிரூபிக்கப்பட்டு மூன்று வைதிக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களும் ஒரு மனதாய் எடுத்துக்காட்டிய கீழ் விவரித்த ஸ்வரூப ஸம்பந்த குணாதிகளை யுடைய ஸர்வேச்வரனாகிய ஸ்ரீவிஷ்ணுவென்னும் புருஷோத்தமனிடத்தில் காணாத உயர்ந்த பரப்ரும்ம விசேஷணங்கள் வேறு எந்த மதத்திலும் சொல்லப்படவில்லை. அவன் ஸ்வபாவத்திலேயே ஸர்வஜ்ஞன்; ஸர்வசக்தன்; பரம காருணிகன். அன்றியும் எல்லா சேதநாசேதநங்களுக்கும் அந்தராத்மாவாகையால் அவன் நம்மை ரக்ஷிப்பது தன் சரீரத்தை அல்லது உடைமையத் தான் ரக்ஷித்துக்கொள்ளுவதாகிறது. எனவே ஜகத் ரக்ஷணம் பகவானுக்குத் தன் ப்ரயோஜநமே யாயிற்று. அவனுக்குச் சரீர பூதர்களாயிருக்கும் ஜீவர்கள் அறிவையுடையவர்களாய், அறியும் தன்மையில்லாத பகவத் சரீரங்களான அசேதந வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களாகையால், அவர்கள் தன்னிடத்தில் ஏதாவது ஒரு வ்யாஜத்தால் ரக்ஷணத்தை அபேக்ஷிக்க வேணுமென்பதை மட்டும் எதிர்பார்க்கிறான். அதுவும் அவன் ஒருவரிடத்திலும் பக்ஷபாதமில்லாமலிருக்கும் தன்மையைப் பற்றியதேயாகும். விபரீத வழிகளில் நடப்பவர்களை அவன் ஒருவாறு தண்டிப்பதும் அவனுடைய க்ருபையின் கார்யம். அது அவனுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தத்தால் ஏற்படுகிறது. மதாந்தரங்களில் ஈச்வரனை ஸர்வ ப்ரபுவாய் மட்டும் நிரூபித்திருக்கும்; அவன் கருணையும் அவன் கேவல இச்சையினால் ஏற்பட்டது; இஷ்டப்பட்டால் அவன் கருணை புரியாமலுமிருக்கலாம்; உதாஸீநனாயுமிருக்கலாம், சில மதங்கள் ஈச்வர குணாதிகளைப் பரிசீலிப்பது மனிதர்க்குத் தகாது, குற்றமுமாம் என்றும் சொல்லி விடுகின்றன. ஈச்வரன் தண்டதரன் என்னும் ஒரு அம்சமே அம்மதங்களில் எதற்கும் நியாமகமாகிறது. ஆகையால் இத்தகைய குறையொன்றுமில்லாத நம் கோவிந்தனே ஸர்வ மதாபேக்ஷித பரதேவனென்று கீழ்ச் சொல்லியவாறு நிஷ்கர்ஷிக்கக் குறையில்லை.



### ஹிதம் அல்லது வசீகரிக்கும் உபாயம்.

பரம புருஷனை ப்ரீதி செய்து நமக்கு அநுகூலமாக்கிக்கொள்ளும் வழிகள் பல மதங்களிலும் பலவாறாகப் பேசப்பட்டன. எல்லாவற்றிலும் ப்ரார்த்தனை என்பது பொதுவாகப் பேசப்படலாம்; ஸாதநங்களெனப்படும் சேதநர் கார்யங்கள் வேறுபடலாம். ஆனால் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் உபதேசிக்கப்படும் ப்ரபத்தி யென்னும் உபாயத்தில் ஒரு ஏற்றமுண்டு. தாழ்ந்தவன் ப்ரபுவை அண்டுவது எங்கும் ஸஹஜம்தான். எனினும், நாம் நமது ப்ரபுவாகிய ஈச்வரனை ரக்ஷகனாக அறிந்து அவன் திருவடிகளில் நமது ரக்ஷண பாரத்தைப் போடும் ப்ரகாரத்தில் வாசியென்ன வென்றால், அது அவனுக்கும் நமக்கும் உள்ள உடையவன் உடைமை என்னும் ஸம்பந்தத்தினடியாக உள்ளது. நம்மை ரக்ஷிப்பது அவன் கடமையாகிறது; அவனை ரக்ஷிக்கும்படி வேண்டுவது நமக்கு ஸ்வரூபமாகிறது. ஒரு விலை உயர்ந்த ஆபரணத்துக்கு அறியும் சக்தியிருந்து ‘தான் ஆபரணம்; உடையவன் பூணுவதற்காகவேதான் ஆபரண உருவெடுத்தது’ என்று அது அறியுமானால், அவ்வாபரணம் உடையவனை ‘ஸ்வாமி! நீர் என்னை அணியவேண்டும்; உமக்கு என்னை அணிவதால் ஒரு அதிசயம் ஏற்படவேண்டும்; அது தான் எனக்கு இயற்கையான புருஷார்த்தம்’ என்று ப்ரார்த்திப்பது போலிருக்கும் நமது ப்ரபத்தி. தத்வஜ்ஞாநம் பிறந்தவனுக்குத் தான் ஈச்வரனுக்கே பூணக ஒரு அதிசயம் செய்வதே பரம லாபமும் பரம ஸுகமும் என்னும் அநுபவமுண்டாம்; மற்றதெல்லாம் துக்க அநுபவமாம். இவ்வாபரணத்தை உடையவன் சரீரத்தை விட்டுக் கழற்றி, எவ்வளவு மெதுவான மெத்தையுடைய பெட்டியில் எவ்வளவு பத்ரமாகக் காப்பாற்றி வைத்தாலும், மீண்டும் அதை அவன் தன் உடம்பில் அணிந்தாலல்லது, அது தன்னிலையில் ஸுகித்திருப்பதாக நினைக்காததல்லவா? அப்படியே இவ்விவேகியும் பிரமதேவன் அநுபவிக்கும் பர்யந்தமான ஸுக மடைந்தாலும், அது நரக துல்யமாய்த் தோற்றி, தனக்கு இயற்கையான பகவத் ஸம்பந்தத்தால் ஏற்பட்ட அவன் கலவியினால்

அவனிட்ட வழக்காய் அவனுக்கு ஆபரண ஸ்தாநமாய்ப் பணிசெய்து அநுபவிக்கும் ஆநந்தமே பெற்றல்லது தன்னைத் தரிக்கமாட்டான். ஆகவே 'ப்ரபுவே! உம்முடைமையாகிற அடியேனையும் அடியேனுடையவை யென்பவற்றையும் உமது ப்ரயோஜநத்துக்காகவே கைப்பற்றக் கடவீர்' என்று ப்ரீதிபூர்வகமாக ப்ரார்த்தித்து, ஆத்மாவாகிற தன்னை யவன் திருவடிகளில் ஒப்புவித்து விடுவதுதான் (Surrender or dedication) நமது ப்ரபத்தியின் ஸ்வாரஸ்யமான ஸ்வரூபம். நரகாதி பயங்களைத் தப்பவேண்டுமென்னும் நினைவு மற்ற மதங்களில் சரணாகதிக்கு ப்ரதாந காரணமாகச் சொல்லப்படுகின்றது. நரகாதிகள், பயந்தவர்களின் மனக் கற்பனைகளென்பாருமுண்டு; அவை உண்மைகளாவதில் நமக்கொரு பாதகமுமில்லை. பகவானை விட்டுப் பிரிந்த நொடிப்பொழுதும் பரம நரகமெனத் தவிக்கும் ஞானிக்கு அவை யொருபொருட்டோ? இப்படி,

"[illegible] ।
[illegible] ॥"

என்றபடியே 'நான் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன்; பகவானுக்கே பூணத்தகும் சேஷபூதன்; மற்றவர்க்கும் எனக்கும் நான் ஸ்வதந்த்ரமாக உரியேனல்லேன். ஆகையால் அவனுக்கு ஒரு ஏற்றம் தர அவன் ஸேவையத்தை அபேக்ஷித்து அவனையே சரணமடைந்தேன்' என்று ஸ்ரீவைஷ்ணவர் அநுஷ்டிக்கும் பகவத் வசீகரண உபாயமான ப்ரபத்தியானது எந்த மதத்திலும் உபதேசிக்கப்படும் எந்த உபாயத்தையுங் காட்டிலும் மேலாகக் காண்பதை உரைக்கவும் வேண்டுமோ? இது அந்தணர் முதல் அந்தியர் பர்யந்தமாக எவரும் கைப்பற்றத்தக்கதென்பதையும் அறிஞர் அறிவார்கள்.

### பரம புருஷார்த்தமான மத லக்ஷ்யம் த்யாகம்.

ஆதுநிகர்களுடைய தீவ்ரமான மத அபிநிவேசம் த்யாக ரூபமான பரம புருஷார்த்தத்தைப் பற்றியதே. 'பரலோக ஸமாசாரம் நிற்கட்டும். இவ்வுலகத்தில் இவ்வாழ்வில் ஒருவன் செய்யவேண்டிய உயர்ந்த காரியத்தையன்றோ மதம் சொல்லவேண்டும்?' என்பார்கள். கீழ்ச்சொல்லிய லியோ டால்ஸ்டாய் என்பவரின் கொள்கையே எங்கும் ஒவ்வொரு மாதிரியாகப் பரவியுள்ளது. உலகத்தில் ஜனங்களின் பசி, வ்யாதி, துக்கம் முதலியவைகளைப் போக்குவதே பரம புருஷார்த்தமாம். அதிலும் ஸ்வார்த்த பரதையை த்யாகம் செய்து பிறர்க்காக உழைப்பது மிகவும் மேலானதாகும். பொது ஜந ஸேவையமே (Social Service) நம்முடையவும் ராஜ்ய தந்த்ரத்தினுடையவும் ப்ரதாந லக்ஷ்யமாக வேண்டும் என்பார்கள்.



இத்தகைய மனப் பாங்கும் அதற் கநுகுணமான ப்ரவ்ருத்திகளும் பிற மதங்களின் படிகளில் மநுஷ்யபுத்தியினால் மட்டும் நல்லவை யென்று ஊஹிக்கப்படும். அவை ஈச்வரனுக்கும் உகப்பாக விருக்கும். ஆனால் அவை பொதுவாக 'நாம் த்யாகம் செய்கின்றோம்; நாம் பிறர்க் குழைக்கின்றோம்' என்னும் நினைவுகளை அடியாகக் கொண்டவை யென்பதும் புலப்படும்.

ஸ்ரீவைஷ்ணவ மதம் கூறும் புருஷார்த்தம் இவ்வபிநிவேசங்களை உத்க்ருஷ்டமான ப்ரகாரங்களில் ப்ரகாசிப்பிக்கும். 'தானும் பிறரும் எல்லாரும் பகவானுக்குச் சேஷபூதர்கள்; அவன் ஆபரண அவயவங்களைப் போன்றவர்கள்' என்று தீர்ந்த அநுபவத்தை யுடைய ஸ்ரீவைஷ்ணவனுக்கு 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்,' 'ஸர்வம் ஹரி: ஸர்வமிதம் ஜநார்த்தந:' என்கிறபடியே எல்லாரும் பகவானாகவும் அவன் அவயவங்களுமாகவே தென்படுவார்கள். '[illegible]' என்று ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் சொன்னபடி இவனுக்கு ஸர்வரும் அநுகூலர்களாகவே தோற்றுவார்கள்; ப்ரதிகூல தர்சநமே வராது. ஒருவன் சரீரத்தில் ஒவ்வொரு அவயவமும் மற்றவற்றின் ஹிதத்தை நாடுவதையே தன் ஹிதமாக நாடுவதுபோல், இவனும் மற்ற எவருடைய நன்மையையும் தனதாகப் பாவித்துத் தன் கார்யங்களை நடத்தி வருவான். ஆகையால் தன்னலமொன்றைத் தனியே காணாது, பிறர்க்கு உதவுவதே உண்மையான த்யாகமும் ஸமூக உழைப்புமாகக் காண்பான். இதுவே இவன் பகவானுக்கு ஆபரணமாக இருந்து செய்யும் அதிசயம். இது கேவலம் தன்னிச்சையினால் அஹங்காரத்தினால் 'நாம்' என்னும் நினைவோடு செய்யப்படுவதன்று ஆனால் அதற்கு எதிர்த்தட்டில் நிற்பது. ப்ரபத்தி அநுஷ்டாநத்துக்கு முதல் அங்கமாக உபதேசிக்கப்படும் ஆநுகூல்ய ஸங்கல்பத்தை அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில்,

"சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத்வபு: ।
அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிச்சய: ॥"

[சராசரங்களாகிய பூதங்களனைத்தும் ஈச்வரனுக்குச் சரீரங்கள். ஆகையால் அவர்களுக்கு நன்மை செய்வதே எனது தீர்மாநம்] என்று விவரிக்கப்பட்டது. இதற்கு விரோதி தன்னலம் நாடுவது என்று அடுத்தாப்போல் கூறப்பட்டது. அஹங்கார மமகாரங்கள் நம்மை வஞ்சித்து அழிக்கும் படுகுழிகள் என்று ஸ்ரீதேசிகனும், நம்மை ஸ்வரூபத்தோடு முடிக்கும் என்று ஸ்ரீலோகாசாரியரும் அருளிச்செய்தார்கள். ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் ஸர்வ ஸாரமான உபதேசம் ஸர்வ விதங்களான அஹங்கார மமகாரங்களைக் கழிக்கும். 'நம:' [என் பொருட்டல்லேன், சரணமடைகிறேன்] என்ற திருமந்திரத்தின் நடுப் பதத்தில் கிடக்கும் ப்ரகாரங்களை ஸ்ரீதேசிகன், படிப்

பவரைப் பரவசமாக்கும்படி அருளிச்செய்திருப்பதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் காண்க.

இவ்விதமானால் தான் இக்காலத்தில் ஸர்வ ஜந ஸௌக்யாதிகளுக்காகச் செய்யப்பட வேண்டியதாக விரும்பும் த்யாகாதிகள் ஸர்வோந்நத லக்ஷ்யங்களாகின்றன. நம்மதத்தில் நிலையுடையவர்களுக்கு இவை ஸ்வரூப ஜ்ஞாநத்தால் ப்ரீதியின் பரீவாஹமாக இயற்கையிலுண்டாமவை. ஸமூஹ ஊழியம் (Service) என்பது பொதுவாய் யாவரையும் குறித்துச் செய்யப்படும்போது ஸர்வ பூத ஹித மெனப்படும்; பாகவதர் திறத்தில் இதுவே கைங்கர்யம் எனப் பெயர் பெறும். எல்லாம் பகவானுக்கும் அவன் கைங்கர்யங்களே. அவை, அவனுக்கு நாம் சேஷமாயிருப்பதின் பரம ப்ரயோஜநமாகின்றன.

இப்படிக் கைங்கர்யத்தையே மோக்ஷ பலமாகச்சொல்லும் மதம் வேறு கிடையாது. மோக்ஷ தசையில் பகவானது புத்ரர்களாக அவன் வலதுகைப் புறத்தில் சீரிய சிங்காதநத்தில் வீற்றிருந்து சுருங்காத ஸுகம் அநுபவிக்கும் ஸாம்ராஜ்யம் பரம புருஷார்த்தமென்று கிருஸ்துவ மதம் சொல்லும். நம் மதமோ கீழ்ச் சொல்லிய ஊழியத்தையே நாம் பெறும் இளவரசு பேறு (கிம்கர ஸ்வாமி ராஜ்யம்) என்று காட்டும். இவ்வூழியப் பேறு ப்ரபந்நனுக்கு ப்ரபத்தி பண்ணின நிமிஷம் முதல் கிடைத்து விடுகிறது. இந்த ப்ரகாரத்தில் இவன் ஜீவன் முக்தன். இச்சரீரமிருக்கும்போதும் ஸ்வரூப ஜ்ஞாநம் பெற்றவனும் தன்னைப் பகவானுடைய உபயோகத்துக்காக அர்ப்பணம் செய்துவிட்டவனுகையாலும், தன் ரக்ஷணத்துக்காக இனிச் செய்யவேண்டிய தொன்றும் இல்லாதவனுகையாலும், இவன் ப்ரவ்ருத்திகள் எல்லாம் மோக்ஷ தசையில் செய்யப்புகும் கைங்கர்யங்களே யாகின்றன. இதர மதங்களிற் போல் இதிலும் முக்தனுக்கு அநேக போகங்களும் ஸர்வ லோகங்களிலும் ஸஞ்சரிக்கும் சக்திகளும் மற்றும் விசேஷங்களும் சொல்லப்பட்டாலும், அவையெல்லாம் ப்ரதாநமாய் ஸ்வரூப ப்ராப்தமான சேஷ வ்ருத்தியாகிற கைங்கர்யத்துக்குத் துணைகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாய் உலகத்தில் தர்மம் குலையும்போது அதை நிலைநிறுத்த பகவான் அவதரிப்பதுபோல் முக்தர்களும் அவனுக்கு உதவியாகவோ அவனுகப்பாகத் தனித்தோ வந்து அவன் கைங்கர்யமாகிற தர்ம ஸம்ஸ்தாபநத்தைச் செய்வதும் பரம புருஷார்த்தாநுபவத்தின் ப்ரகாரமாகிறது.

சில மதங்களில் "கைங்கர்யமென்பது க்ரியா ரூபமானதால் அது ஸுகமாகாது; துக்கமேயாகும். ஆகையால் ஒரு வ்யாபாரமுமில்லாமலிருக்கும் தசையாகிய துக்காந்தமே மோக்ஷம்" என்று உபதேசிக்கப்படும். இது மிகவும் சிற்றறிவாளர் பேச்சு. ஸுகமும் துக்கமும் மனத்தின் நிலையைப் பொறுத்தவை. நமக்கபிமாந பாத்ரர் விஷயத்தில் ஸ்வேச்சையாய்ச் செய்யும்



கார்யம் ஸுகமாகவே யிருக்கும். பராதீநமாய்ச் செய்வதெல்லாம் துக்கம் தான். ஸ்வரூபம் தெளிந்த ஸ்ரீ வைஷ்ணவனுக்குக் கைங்கர்யம் பிறர் நிர்ப்பந்தத்தால் வருவதன்று. கீழ் உதாஹரித்த ஆபரணத்தின்படியே கைங்கர்யமே இவன் தன்மைக்குப் பொருந்தியதாகையால், இவன் துக்க லேசமும் அநுபவியான். இது லோக அநுபவங்களிலும் ப்ரஸித்தம்.

இப்படி ஈச்வர ஸ்வரூபம், அவன் ப்ரீதியை ஸம்பாதிக்கும் உபாயம், தத்வ விவேகத்தால் நம் வாழ்நாளில் நாம் மிகவும்உயர்ந்த லக்ஷியமாக நினைத்து லோக ஹிதார்த்தமாகச் செய்யவேண்டிய ஊழியங்கள் ஆகிய விஷயங்களில் ஸ்ரீ ராமாநுஜ பகவான் ப்ரவர்த்தநம் செய்த மதம் உலகுக்கெல்லாம் உரித்தானதாய் ஸர்வ ச்ரேஷ்டமா யிருக்கும் ப்ரகாரத்தைச் சுருங்கக் கண்டோம். இவ்விதமாகவே ஒவ்வொரு ப்ரகாரங்களிலும் இதன் ஏற்றத்தை நிரூபிக்க முடியும். இந்த மத உபதேசங்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனத்தில் நன்றாய் அநுபவித்து பரஸ்பரம் ஹிதத்தையே நாடிச் சரண்யனுடைய பரம க்ருபைக்குப் பாத்ரர்களாய் வர்த்திக்கக் கடவர்கள்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரும் அவர்களின் கொள்கைகளும்.

(ஸ்ரீ உ. வே. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

ஸர்வ ஜகந்நியந்தாவான ஸ்ரிய: பதியை உபாஸிப்பவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களென்று உலகத்தில் வழங்கப்படுகின்றனர். வர்ணாச்ரம பேதமின்றி விஷ்ணுவை உபாஸிப்பவர்கள் யாவரும் இந்த வைஷ்ணவ பதத்திற்கு வாச்யர்கள். தற்காலத்தில், பாமரர்கள் அனைவரும், ச்வேத ம்ருத்திகையினால் புண்ட்ரம் தரித்தவர்களைத் தான் வைஷ்ணவர்களென்று பெரும்பான்மையாக வழங்குகின்றனர். இது கேவலம் அந்த பரம்பரை வழக்கமாக ஏற்படுகிறது. உபாஸனை என்பது மநோவ்யாபாரமே யொழிய கேவலமான பாஹ்ய சரீர வ்யாபாரமன்று. பாஹ்யங்களான லிங்கங்கள் ஒன்றும் அவைகளுக்குப் போதகங்களாக ஆகா. ஸம்ப்ரதாயமென்பது தொன்றுதொட்டு ஆசார்ய பரம்பரையால் உபதேசிக்கப்பட்டு வரும் மந்த்ரம் மந்த்ரார்த்தம் ஆசாரம் நல்வழக்கம் முதலியவைகளே. இப்படிப்பட்ட ஸம்ப்ரதாயத்தை அதிக ச்ரத்

தையோடு ஆஸ்திகதையை முன்னிட்டுக் கையாடுகிறவர்கள் தாம் ஸ்ரீ வைஷ்ணவர்கள். இந்த ஸம்ப்ரதாயத்தை நிதிபோல் பாதுகாப்பதற்காகவே ஆசார்யர்கள் பெரும் பாடு பட்டிருக்கிறார்கள். இந்த விஷயம் க்ரந்த பரிசீலனங்களிலும் ஸதாசாரத்திலு மிழிந்தவர்களுக்கு விசதமாகும். வேதத்திற்கு உட்பட்ட ஸமயங்களுக்கும் இந்த வைஷ்ணவ ஸமயத்திற்கும் ஒரு விசேஷமான ஏற்றம் உண்டு. அது எது என்றால் ஸம்ப்ரதாயம் என்பது தான். அதாவது, எதை இவர்கள் அவலம்பிக்க வேண்டுமானாலும் ஆசார்யனையே ஆச்ரயித்து அவனுடைய உபதேசத்தை முன்னிட்டு அவலம்பிக்க வேண்டும். வைஷ்ணவன் என்று ஒருவன் சொல்லப்பட வேண்டுமானால் அவனுக்கு ஆசார்யாநுக்ரஹ மில்லாவிடில் அவன் அந்த சொல்லுக்கு விஷயமாகமாட்டான். பஞ்ச ஸம்ஸ்கார மில்லாதவன் ஸ்ரீவைஷ்ணவனாகான். ஸம்ஸ்காரம் என்பது வைதிக க்ரியையினால் உண்டாகக்கூடிய குணோத்கர்ஷம். அது ஒருவனுக்கு ஏற்பட்டாலன்றி வைஷ்ணவத்வம் அவனிடத்தில் ப்ரகாசியாது. ரத்னத்திற்குச் சாணை பிடிப்பதால் ஒளி எழுந்து வீசுவது போல், இந்த ஸம்ஸ்காரத்தால் ஸ்ரீவைஷ்ணவத்வம் எங்கும் பரந்து ப்ரகாசிக்கிறது. அவற்றுள் தாபம் என்பது முதன்மையானது. அதாவது மந்த்ர புரஸ்ஸரமாக அக்நியில் சக்ரத்தையும் சங்கத்தையும் தப்தமாக்கி, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய இருகரங்களின் மூலங்களிலும் (இருதோள்களிலும்) அடையாள மிடுதல். அடுத்த ஸம்ஸ்காரம் புண்ட்ரம்; அதாவது ச்வேத ம்ருத்திகையினால் பகவத் பாதாகாரமான ரேகையை லலாடம் முதலிய அங்கங்களில் தரித்தல்; புண்ட்ர தாரணத்திற்கு ஸாதநங்களான வஸ்துக்கள் அநேகம் உண்டு. சிலர் கோபீ சந்தநத்தாலும் சிலர் அங்காரத்தாலும் (கரியினாலும்) சிலர் சாம்பலாலும் சிலர் சாந்தினாலும் சிலர் ஸிந்தூரத்தினாலும் புண்ட்ரங்களைத் தரிக்கின்றனர். அவைகள் எல்லாம் இந்த ச்வேத ம்ருத்திகைக்கு ஈடாகா. இது சுத்த ஸாத்விக த்ரவ்யம்; சுத்த ஸத்வமயமாக விளங்காநின்ற ச்வேத த்வீபத்தினின்று இம் ம்ருத்திகை வேதாத்மாவான ஸ்ரீவைநதேயனால் இக்கர்ம பூமியில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது; இது ஸ்பர்சித்தால் ஆஹ்லாதத்தை உண்டு பண்ணுகிறது; தரித்தால் ஸர்வாங்கங்களிலும் ஒருவித சோபையை உண்டாக்குகிறது; தேஹத்துக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் காந்தியினால் பார்ப்பவர்களின் உள்ளத்தையும் கவர்கின்றது; மநோரம்யமான தோற்றத்துடன் கூடியது; ச்வேத ம்ருத்திகையை அணிவதால் இவ்வளவு குணங்களும் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகின்றன. பரோக்ஷமான மஹாபலம் ஒன்று இதைத் தரிக்கிற சேதநனுக்கு ஏற்படுகிறது. அதாவது யமபாதையின் இன்மை. இந்த ச்வேத ம்ருத்திகா புண்ட்ரத்தைக் கண்டவுடனே யமபடர்கள் பயந்து உள்ளம் நடுக்குண்டு ஓடுகிறார்கள் என்று ஸாத்விக புராணங்களும் ஸச்சாஸ்த்ரங்களும் கூறுகின்றன. இதைத் தரிப்பதினால் ஸஞ்சித பாபங்களனைத்தும் நாச மடைவதுடன் ஆகாமி பாபங்களும் வேர்



ஊன்ற இடமில்லாமல் அழிந்து விடுவதாக ஸாத்விக சாஸ்த்ரங்களின் கொள்கை. இதைத்தரிப்பவர்கள் மஹா சுத்தாத்மாக்கள். இவர்களின் ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களெல்லாம் பாவநமாக ஆகின்றன. ஸர்வ ஜகத்துக்களுக்கும் பயங்கரனான யமன் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் நடுக்கமுற்றவனாக ஆகிறானென்றால் இவர்களுடைய மஹிமையைச் சொல்ல முடியுமோ? இந்த புண்ட்ர சப்தமானது "வணஃகஉழுணிய-லெஹ" என்கிற தாதுவினின்று தோன்றியது. சாகடாயந மஹர்ஷியினால் செய்யப்பட்டுள்ள உணாதி ஸூத்ரத்தினால் இந்த சப்தம் நிஷ்பந்ந மாகிறது. இவ்விதமாகவே நாம என்பது மூன்றாவது ஸம்ஸ்காரம். அதாவது, ஆசார்யன் ஸம்ஸ்கார்யனான சிஷ்யனுடைய வலது காதில் ரஹஸ்யமாகச் சொல்லும் பெயர். மாதா பிதாக்கள், சிசு பிறந்த பதினோராவது நாளில் இடும் ப்ரஸித்தமான பெயரைக் காட்டிலும் இது விலக்ஷணமான நாமதேயம். இதைக் கோப்ய நாமா வென்று அபியுக்தர்கள் உரைப்பர். நான்காவது மந்த்ரம்: அஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம், ஷடக்ஷரம், த்வாதசாக்ஷரம், ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீ விஷ்ணு புராணம் பகவத் கீதை முதலியவைகள். இந்த நான்காவது ஸம்ஸ்காரம் தான் எல்லா ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் சிறந்தது. ஏனெனில் ப்ராஹ்மணனுடைய தேஹத்தைப் பாவநங்களான மந்திரங்களால் பரிசுத்தமாக்கி ப்ரஹ்ம ப்ராப்தி யோக்யோபாஸநாதிகளுக்குத் தகுதியுள்ளதாகச் செய்வதால். ஐந்தாவது ஸம்ஸ்காரம் யாகம். அதாவது பகவதாராதந ரூபமான இஜ்யோபயுக்தங்களான மந்த்ரங்களை உபதேசித்தல். இப்படி ஆசார்யாநுக்ரஹத்தினால் ஏற்படுகிற பஞ்ச ஸம்ஸ்காரத்தால் தான் ஸ்ரீ வைஷ்ணவனுக்கு ஸ்ரீ வைஷ்ணவத்வம் ஸித்தித்து, அவன் சாஸ்த்ரீயங்களான எல்லாக் கர்மாக்களிலும் யோக்யதையைப் பெறுகிறான். மற்றவர்களுக்கு இல்லாமல் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான குலதநமாயுள்ளது ஆசாரம். இந்த ஆசாரத்தை அஸ்திவாரமாகக் கொண்டே இந்த ஸ்ரீ வைஷ்ணவத்வம் எழுந்திருந்திருக்கிறது. ஸாங்கோபாங்கமாக வேதங்களையும் சாஸ்த்ரங்களையும் கற்றுக் கர்மாநுஷ்டாந தத்பரர்களாக இருப்பவர்களுக்கும் கூட ஆசாரமே முக்யமாயுள்ளது. அஃதில்லாவிடில் அவர்கள் கற்ற வேதங்களும் சாஸ்த்ரங்களும் கர்மாநுஷ்டாநங்களும் அவர்க்குப் பயனைக் கொடா; மனிதனைப் பரிசுத்தப்படுத்தவும் சக்தியுள்ளவைகளாகா. ஆசாரஹீநனை அலக்ஷ்மீ ஒருக்காலும் விட்டு அகலமாட்டாள். ஆசார முள்ளவனை எல்லா ச்ரேயஸ்ஸுக்களும் தாமே வந்து அணுகுகின்றன. ப்ரஹ்மவர்ச்சஸம் ஆசார முள்ளவனிடம் ஸாந்நித்யம் செய்கிறது; இதை ப்ரத்யக்ஷமாகவும் காணலாம். மனிதன் கடைத்தேறுவதற்கு ஆசார்யனே கதி என்றும், அவனில்லாவிடில் உலகமே இருளடைந்துவிடு மென்றும் வேத சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்திக் கரை

காணுமல் தபிக்கிற ஜந்துக்களைக் கரை ஏற்றுவதற்காக ஸ்ரீமந்நாரயணனே ஆசார்ய ரூபமாக அவதரிக்கிறான் என்று சாஸ்த்ரம் பகர்கின்றது. பரதேவதையினிடத்தில்போல் ஆசார்யனிடமும் பக்தி செய்யத்தக்கது என்றும், அதுதான் இவனுக்கு ச்ரேயஸ்கர மென்றும், அப்படி பக்திபண்ணுகிறவனுக்குத் தான் ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட எல்லா அர்த்தங்களும் ப்ரகாசிக்கு மென்றும், அவன் தான் மஹாபுருஷ னென்றும், அபியுக்தர்கள் கூறுகின்றனர். ஆசாரம் முக்யமா யிருப்பது பற்றியே உபநயந ஸம்ஸ்காரம் செய்விக்கப்பட்டவுடன் மாணவகனுக்குச் சௌசம் முதலிய ஆசாரங்களைக் கற்றுக்கொடுக்கும்படி மநுஸ்ம்ருதி கூறுகிறது. இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சௌசம் முதலிய ஸதாசார மிருப்பதாலேயே இவர்கள், வைதிக ஸமயஸ்தர்களாக உலகில் விளங்குகிற ஆஸ்திகர்களுக்குள் ஸர்வோத்தமமான மேன்மை நிலை பெற்றிருக்கிறார்கள். மேலும் கர்மயோகத்தால் பாபங்கள் க்ஷீணித்துச் சித்தசுத்தி ஏற்பட்டு ஜ்ஞாந நிஷ்டையை நாடி ப்ரக்ருதியை விட்டு விலகினதாகவும், பரசேஷதைக ரஸஸ்வபாவ முள்ளதாகவு மிருக்கிற ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தை நிரந்தர சிந்தநம் பண்ணி, யோகமுகத்தால் ஆத்மாவலோகநம் பிறந்து, பக்தியோகத்தை நாடி, தைலதாரையைப் போல் இடைவெளியின்றி நாள்தோறும் அப்யாஸத்தால் உண்டுபண்ணப்பட்ட அதிசயத்தை உடையதாயும் சரீரத்தைவிட்டு ஜீவாத்மாவின் வியோகம் வருகிறகாலம் வரையிலும் அநுஷ்டிக்கப்படுவதாயுமுள்ள பரபக்தி என்று வ்யவஹரிக்கப் படுகிறதும் பர பக்தி பரஜ்ஞாநம் பரம பக்தி என்கிற பர்வாக்களுடன் கூடியதுமான பக்தி யோகத்தால் பரமாத்மாவை உபாஸித்து, அவனுடைய ப்ரஸாதத்தைத் தேடி, அந்த ப்ரஸாதத்தாலாவது அல்லது ப்ரபத்தி ரூபோபாயத்தால் ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணியாவது அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவ ரூபமான ஸாயுஜ்யத்தைப் பெற்று, பர ப்ரஹ்மத்தோடு ஸமாநமான ஸகல போகங்களையும் அநுபவிக்கிற பாக்யத்தை மோக்ஷ தசையில் அடைவிக்கும் ஸித்தாந்தத்தை நாடினவர்களாதலால் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பாக்யம் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததா யிருக்கிறது. மேலும்,

"ஶிகாம் புண்ட்ரஞ்ச ஸூத்ரஞ்ச ஸமயாசாரமேவ ச ।
பூர்வைராசரிதம் குர்யாத் அந்யதா பதிதோ பவேத் ॥"

என்கிற அபியுக்த வசந ப்ரகாரம் இவர்கள் சிகை புண்ட்ரம் ஸூத்ரம் ஸமயாசாரம் இவைகளை, முன்னோர்கள் ஆசரித்து வந்தபடியே ஆசரிப்பவர்களாக இருந்து வருகிறார்கள். இப்படி இருப்பது வைதிக மார்க்க ஸம்ரக்ஷணத்திற்கு முக்யமான உபாயமாகும். கலிகாலக் கொடுமையினால் சிற்சில இடங்களில் இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்பந்துக்குக் கொஞ்சம்



குறைவு நேர்ந்திருந்தபோதிலும், அந்தக் குறைவு பரமபுருஷனுடைய நிர்வ்யாஜ கருணையினால் சாந்தமாகி, அது முன்னேற்றத்திற்கே வந்துகொண்டிருக்கின்றது. இது சுத்தாந்த ஸித்தாந்தம். அதாவது இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்தப்புர ஸ்த்ரீகளுடைய கொள்கையை உடையவர்கள். அந்தப்புரஸ்திரீகள் எவ்வாறு தமது கணவனைத் தவிர்த்து மற்றப் புருஷனைக் கண்கொண்டு பாராமலும் மனத்தினால் நினையாமலும் இருப்பார்களோ அவ்வாறே இவர்கள் ஸாக்ஷாத் ச்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்த்து மற்றொரு தேவதையையும் மனத்தினால் கூட நினைப்பதில்லை. இவர்கள், "ஏகோ தைவ: கேசவோ வா சிவோ வா" என்கிற வசநப்படி ஒரு தேவதையையே ஆச்ரயித்தவர்கள்; த்ருடமான நிச்சயமுடையவர்கள்; காம்ய கர்மாக்களை முற்றிலும் துறந்து, பலம் ஸங்கம் கர்த்ருத்வம் இவைகளை விட்டுப் பகவானுடைய முகோல்லாஸத்தை உத்தேசித்தே பகவதாராதந ரூபமாகக் கர்மாக்கள் செய்யத்தக்கவைகள் என்கிற புத்தியோடு செய்பவர்கள்; ஐஹிக ஸம்பத்துக்களையும் ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸையும் ஸ்வாராத்ய தேவதையாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தி லிருந்தே வேண்டுகின்றவர்கள்.

"ஶரீராணாமபி யஜ்ஞாம்ஶ்ச ஹோமாம்ஶ்சைவாநுஷ்டிதாந் ।
ஏகாந்தி யஜ்ஞிநாம் வஹ்ஸோ வைவமேவ ப்ரதோஷ்யதி ॥"

என்கிற அபியுக்த வசநத்தை த்ருடமான நிச்சயத்துடன் மனத்தில் கொண்டவர்கள். இவர்களுடைய பாரமைகாந்த்யமானது புடமிட்ட பதினறு மாற்றுத் தங்கத்துக்கு நிகரானது. இவர்கள் பாகவத ப்ராவண்யத்தைக் குலதநமாகக் கொண்டிருப்பவர்கள்.

"ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் ।
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம் ॥"

என்கிற வசநத்தின்படி பகவதாராதநத்தைவிட பாகவதாராதநமே சிறப்பு வாய்ந்ததென்கிற த்ருடமான கொள்கையைக் கைக்கொண்டவர்கள். எல்லா வஸ்துக்களும் பகவதாத்மகங்க ளென்று அநுஸந்தித்து, கரண த்ரயங்களாலும் பரஹிம்ஸையைச் செய்யாதவர்கள். கல்வியினாலோ தநத்தினாலோ கௌரவத்தினாலோ பலத்தினாலோ, ஸௌந்தர்யத்தினாலோ, அறிவினாலோ சொல்வன்மையினாலோ, எந்த வஸ்துவினிடம் ஏற்ற மிருக்கிறதோ அதைப் பகவத் விபூதி என்று ஆமோதிப்பவர்கள். எல்லாக்குணங்களையும்விட கருணை இவர்களுடைய உள்ளத்துக்குப் போணியாக விளங்கி வருகிறது. இப்படி யிருப்ப

தெல்லாம் இவர்களுக்குக் குல பரம்பரா ப்ராப்த தர்மங்கள். மேலும், 'பகவதவதாரங்களெல்லாம் மாயிகங்களல்ல; உண்மையானவைகள்; அவை, ஸஹஜங்களான குணச்ரேஷ்டங்களால் அலங்கரிக்கப் பட்டவைகள்; சுத்த ஸத்வமயங்கள்; தன் ஸங்கல்பத்தால் தோன்றியவைகள்; தர்ம ஸம்ரக்ஷணார்த்தம் உதித்தவைகள்; துஷ்டர்களை நாசஞ்செய்து, ஸாதுக்களின் துக்கத்தை விலக்குவதிலேயே முக்ய நோக்கமுள்ளவைகள்' என்கிற ஊர்ஜித பாவனையுள்ளவர்கள். பகவத் ஸங்கல்பத்தால் எது எவ்வளவு கிடைக்குமோ அதனால் மிக்க த்ருப்தியடைபவர்கள். இது அஜகரவ்ருத்தி. இந்த ஆஜகர வ்ரதந்தான் ப்ராஹ்மணனுக்குச் சிறப்புள்ளதென்று ஸ்ரீ மஹா பாரதத்தில் ஆஜகரோபாக்யானத்தில் கூறப்பட்டிருக்கிறது. எவ்விதமான ஆபத்து வந்தபோதிலும் ஸ்வதர்மத்தை மனதார விடுவதற்கு ஸம்மதியில்லாதவர்கள். ஸ்வலாபத்தில் ஸந்துஷ்டியுள்ளவர்களும் தார்மிகர்களும் பூததயையுள்ளவர்களும் அஹங்கார மற்றவர்களும் சாந்தியைப் பூஷணமாகக் கொண்டவர்களுமான ப்ராஹ்மணோத்தமர்கள் பரமாத்மாவினாலேயே வந்தநம் செய்யத் தக்கவர்களாக ஆகிறார்களேயாகில், இந்த குணங்களுடையவும் இந்த குணங்களை அணியாகக் கொண்டிருக்கிற சேதநர்களுடையவும் பெருமையை எவர்களால் தான் எடுத்து உரைக்க முடியும்? மேலும் யாகாதிகள் செய்யத்தகாதவைகளென்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்த போதிலும் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாகத்துக்கு ஸாதநங்களாக இருக்கிற மந்த்ரங்கள் த்ரவ்யங்கள் தநங்கள் ஸ்தலங்கள் பசுக்கள் ருத்விக்குகள் எல்லாம் க்ரூரமான கலியின் ப்ரபாவத்தால் நிர்வீர்யங்களென்று நுண்ணறிவினால் நன்கு ஆராய்ந்து கண்டு யாகாதிகளை உள்ளபடி அநுஷ்டிக்க முடியாமையால் யஜமானன் முதலிய ருத்விக்குகள் கேவலம் ப்ரத்யவாய தூஷிதர்களாக ஆவதன்றி பலபாக்குக்களாக ஆவதில்லை என்று நிச்சயித்து, இக்கலிகாலத்துக்கு அந்த யஜ்ஞாதிகள் தகுதியுள்ளவைகளாகாததால் பகவதாராதந ரூபமான இஜ்யையே மஹாயாகமென்று தீர்மானித்து ஹிம்ஸாலேசமற்ற இந்த இஜ்யையையே இவர்கள் யஜ்ஞஸ்தாநத்தில் அநுஷ்டித்து வருகிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்களுடைய இந்த அநுஷ்டாநமே ஸரியானது. ஏனெனில் நியமாத்யயந மில்லாமையாலும் ஸத்ஸம்ப்ரதாய மில்லாமையாலும் மந்த்ரங்கள் வீர்யமில்லாதவைகள். அப்படியே யஜ்ஞாநுஷ்டாந ஸாதநமான ஸ்தலங்களும் தக்க ஸம்ஸ்கார மில்லாமையால் அசுத்தங்கள். நீசன் அபிசஸ்தன் முதலியவர்களுடைய பொருள் கூடச் சேருவதால் தக்ஷிணார்த்தமான தநங்களும் அசுத்தங்கள். இவ்வண்ணமாக மந்த்ரம், தநம் ஸ்தலம் எல்லாம் அசுத்தங்களாகவும் நிர்வீர்யங்களாகவு மிருப்பதுபற்றியே இக்காலத்தில் யஜ்ஞாத்யநுஷ்டாநம் கேவல தோஷாபாதகமென்றெண்ணி, பரம கருணாநிதியான மநுவானவர்,



" ஜப்யேநைவ து ஸம்ஸித்யேத் ப்ராஹ்மணோ நாத்ர ஸம்சய: |
குர்யாதந்யந்ந வா குர்யாந் மைத்ரோ ப்ராஹ்மண உச்யதே " ||

என்று யாகாதிகளைக் காட்டிலும் ப்ராஹ்மணனுக்கு காயத்ரீ மஹா மந்த்ர ரூப மொன்றே நிச்ரேயஸாபாதகமென்று பகர்ந்திருக்கிறார். ஸாத்விக ப்ரக்ருதிகளாக இருக்கிற இவர்களுக்கு இவ்வண்ணம் இதுகாறும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிற காயத்ரீ மஹா மந்த்ர ஜபமே தகுதியுள்ளது.

" ஸுஸார ஸ்வஸாரம்ஷ ஸாரம் ஸாரதரம் த்விஜ: |
ஹ்ருதேஸ்ஸார தத்வம் ஸாவித்ரம் ஸந்தாகர்ஷ உபாஸ்யதாம் || "

என்கிற மஹான்களுடைய வசநத்தை உள்ளத்தில் அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டு அந்த நன்னெறியிலேயே கமநாகமநம் செய்து ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸைப் பெறுவதில் பத்த கங்கணர்களாக விளங்கிவருகிற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஆசாரணமே புகழத்தக்கது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ந்யாஸரீதி. †

யஸ்யாபவத் பக்தஜநார்த்திஹந்து: |
பித்ருத்வமந்யேஷ்வவிசார்ய தூர்ணம் ஸ்தம்பே(அ)வதாரஸ்தமநந்யலப்யம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஸரணம் ப்ரபத்யே ||

காந்தம் ஸுமுகம் ஸதாதநம் ஸுவிநயோ விப்ரஸாஸ்த்ரோ யஸ்து |
வந்தேஹம் விஜயராகவாய ஸஹய ஸ்ரீவ: ஸுபோத கிரஸாணாம் ||
யஸ்ஸந்த்யாஸ்ய ஸாத்ரார்த்த ப்ரயாயதே ஸாத்ரமோவி ஸாஸஜந: |
லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸாஜிஸ் யதிவர மஸ்ஸா ஸாஸ ஸ ஜயதி ||

---

† இது, சென்ற வைகாசி மாஸத்தில் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில் மோகனூர் ஸ்ரீ. உ. வே. வித்வான் கிடாம்பி இராமாநுஜாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

யதிஹ்யாஸ்துதி விஷயே ஜ்ஞாநம் ஸ்வைவ ப்ரதாம் பவதி ।
தம் வந்தே ஜ்ஞாநதீக்ஷாசார்யம் ராமாநுஜார்ய பதிசேஷ்யாஹம் ॥

அஷ்டாதே ஸ்ருதி ஸஞ்ஜா கண்டேக்ஷாஹம் வஹந்தி கவயோத்ர ।
கருணாமர்ண நியதா ஸவி நாதிவிஷயே பவாமி ஸம்யோகம் ॥

தாத்ருஸ மார்க்கணாதிஷோ வைஷ்ணவ ஸித்தாந்த ஸத்ஸதாம் ப்ராப்த: ।
ராமாநுஜார்ய தாஸ: ஸத்யாநவிஷ்ணு ஸ்வாமி ஸம்ஸ்நீயாந் ॥

ஆநந்த தாஸ்யுபஸ்யேஹ ஸர்வயம் ஸதீய நாகணஷ்ய ஸாதரமநுவதந்ய
[ஸநாநிதாநி ।

யத்வாஜிதம் கிமபி ஸாரகலாவிரசித ஸ்தாவஸ்ய தஸ்ய வசநாமிஹ
[தஸாஸ்யதேஸ்ய ॥

ஸாஸ்த்ர ஸம்ப்ரதாய வரணா வைஷ்ணவ ஸித்தாந்த ஸத்ஸதாம் ஸாதி ।
ஸெளம்ஸ்ரீ ஸஹைவ ஸாக்ஷாத் பத்யமார்க்கவிதி: ப்ரகாஸிதா
[நித்யம் ॥

ஸாஸ்யம் தோஷிஜராஜா ஷிஜராஜா அபி ஸம்பவா ஸ்யேது ।
அக்ஷாந்த ஸத்ர ஸஹாயாம் மாரவொவெத்தே பராயா ஸாந்தி ॥

ஜந்தா தேஸாஷாகராவ்ய ஸ்ய அஸிநவநீதாயக ஸ்ஷிரோயீ
தாத்ருக்ஷணஸ்வாயத ஸ்கார்ண ரவார்ணாட் யஸ்ஸம்மம்அகார ॥

ஹோமீந்த்ராவி ஷிஜிஸ்வ ஸ்கமு ஸவம கருணாஷிஜாதோ விரிஞ்சி:
தஸ்யாத்ராமதாநாம் ஸதஸி ந ஜதே கொவிஸாஸ்யம் த்ரியோகம்

இப்படிப்பட்ட ஸமஸ் ஸபையில் ஸதஜ்ஞனை அடியேனுக்கும் ஏதோ கொஞ்சம் பேசும்படியாய் நேர்ந்ததில் மிகவும் ஸந்தோஷிக்கிறேன். நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்று மூன்று உண்டு. தத்வ மென்பது—பரதத்வம் அபரதத்வம் என இரு வகைப்படும். பரதத்வ மென்பது—ஸ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே. அபரதத்வ மென்பது—சேதநம், அசேதநம் என இருவகைப்படும். சேதந னென்பது, பத்தர் முக்தர் நித்யர் என மூவகைப்படும். அசேதந மென்பதும், ப்ரக்ருதி காலம் பரம ஸத்வம் என மூன்று விதம். பத்தர் என்பவர், ஸம்ஸாரிகளா யிருப்பவர்கள். முக்தர் என்பவர் ஸம்ஸாரத்தை விட்டு உபாயாநுஷ்டாநத்தால் மோக்ஷம் பெற்றவர்கள். நித்யர் என்பவர், அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள். ப்ரக்ருதி என்பது, ஸத்வரஜஸ்தமோ குண ரூபமானது. கால மென்பது கலைகள் காஷ்டை முதலிய பக்ஷம்



மாஸம் முதலியது. பரம ஸத்வம் என்பது ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள அப்ராக்ருதமான சுத்தஸத்வமயமான த்ரவ்யாதி. ஹிதம் என்பது மோக்ஷத்தை அடைவதற்கு வேண்டிய உபாயம். அதாவது, ப்ரபத்தி. புருஷார்த்த மென்பது பகவத் கைங்கர்ய ரூபமான மோக்ஷம். ப்ரபத்தியதிகாரிக்கு இவ்வளவு ஜ்ஞானமாவது அதம பக்ஷம் இருக்கவேணும்.

ப்ரபத்திக்கு அதிகாரி.

(1) சோகம் (2) பீதி: (3) விஸ்வாஸம் (4) சேஷத்வ ஜ்ஞானம் (5) தேவதாந்தர வைமுக்யம் (6) ப்ரயோஜநாந்தர வைமுக்யம் (7) ஆகிஞ்சந்யம் (8) மோக்ஷகாமித்வம் என்கிற எட்டு அதிகாரம் இருப்பவர் ப்ரபத்திக்கு அதிகாரியாவார்.

(1) சோகமாவது—இதுபர்யந்தம் ப்ரபத்தியைப் பண்ணாமல் வ்யர்த்தமாகக் காலம் போய்விட்டதே என்கிற வ்யஸநம். (2) பீதியாவது—இப்பாலாவது ப்ரபத்தியைச் செய்துகொள்ளாமல் போனால் அதற்கு என்ன ப்ரதிபந்தகம் வருமோ, நரகாதி ப்ராப்தியாயம்தான் எப்படி நிவ்ருத்தமாமோ வென்கிற பயம். (3) விஸ்வாஸமாவது—ப்ரபத்தி பண்ணிக்கொண்டால் எம்பெருமான் மோக்ஷம் கொடுப்பன் என்கிற நம்பிக்கை. (4) சேஷத்வஜ்ஞானமாவது—பெருமாள் ஸ்வாமி, நாம் அவருக்கு தாஸபூதர் என்கிற ஜ்ஞானம்; (அதாவது) எப்படி தேகமானது ஆத்மாவினுடைய ப்ரயோஜநத்திற்காக ஏற்பட்டிருக்கிறதோ, அப்படியே எம்பெருமானுடைய ப்ரயோஜநத்திற்காகவே நாம் ஏற்பட்டிருக்கிறோம் என்கிற ஜ்ஞானம். (5) தேவதாந்தர வைமுக்யமாவது—மோக்ஷார்த்திகளான நமக்கு ப்ரஹ்ம ருத்ராதிகளால் கார்யம் இல்லை என்கிற நிஸ்சயம். (6) ப்ரயோஜநாந்தர வைமுக்யமாவது—அஸ்திரங்களான ஸ்வர்க்காதி பலங்கள் நமக்கு வேண்டாம் என்கிற புத்தி. (7) ஆகிஞ்சந்யமாவது—மோக்ஷகாரணங்களான கர்மயோக பக்தியோக ஜ்ஞானயோகங்களிலே ஜ்ஞானசக்தி இல்லாமை. (8) மோக்ஷார்த்தித்வமாவது—அநந்த ஸ்திர கைங்கர்ய பர்யந்த ப்ரஹ்மாநுபவத்தில் அபேக்ஷை.

தவிரவும், (1) ஆநுகூல்ய ஸங்கல்பம் (2) ப்ராதிகூல்ய வர்ஜநம் (3) மஹாவிஸ்வாஸம் (4) கார்ப்பண்யம் (5) கோப்த்ருத்வவரணம் (6) ஸமர்ப்பணம் என்கிற ஆறு அங்கங்கள் ப்ரபத்திக்கு உண்டு.

(1) ஆநுகூல்ய ஸங்கல்பமாவது— பெருமாளுக்கு அநுகூலாசரணம் பண்ணக்கடவேன் என்பது. (2) ப்ராதிகூல்ய வர்ஜநமாவது—பெருமாளுக்கு ப்ராதிகூல்யம் பண்ணுகிறதில்லை யென்கிற ஸங்கல்பம் முத

லியதுதான். (3) மஹாவிஶ்வாஸமாவது—பெருமாள் நமக்கு அவஶ்யம் மோக்ஷம் கொடுப்பானென்று யாவஜ்ஜீவம் ஸம்ஶயமின்றியிலே பிறந்த நம்பிக்கைதான். (4) கார்பண்யமாவது—அடியேனுக்கு கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோகங்களை அநுஷ்டிக்க ஜ்ஞானஶக்திகள் இல்லையென்கிற தெளிவு முதலானது தான். (5) கோப்த்ருத்வவரணமாவது—அடியேனுக்கு தேவரீர்கள் மோக்ஷம் கொடுத்தருள வேணும் என்கிற ப்ரார்த்தனைதான். (6) பலத்யாகமாவது—(அதாவது ஆத்மநிக்ஷேபம்) நமக்கு ஸ்வர்காதி பலங்கள் வேண்டாம், நமக்குப் பெருமாள் கொடுக்கிற மோக்ஷமும் பெருமாளுடையது தான் என்கிற புத்திதான்.

தவிரவும், (1) ஸ்வரூப ஸமர்ப்பணம் (2) பரஸமர்ப்பணம் (3) பலஸமர்ப்பணம் என்று ப்ரபத்திக்கு அங்கத்ரயம்.

(1) ஸ்வரூபஸமர்ப்பணமாவது—ஸ்வஸ்வரூப ஸமர்ப்பணம், ஸ்வீய ஸ்வரூப ஸமர்ப்பணம் என்று அம்ஶத்வய விஶிஷ்டம். (2) பரஸமர்ப்பணமாவது—ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணம் ஸ்வீயரக்ஷாபர ஸமர்ப்பணம் என்று அம்ஶத்வய விஶிஷ்டம். (3) பலஸமர்ப்பணமாவது—ஸ்வரக்ஷாபல ஸமர்ப்பணம், ஸ்வீயரக்ஷா பலஸமர்ப்பணம் என்று அம்ஶத்வய விஶிஷ்டம்.

அடியேனும் அடியேனுடைய வஸ்துக்களும் ஸ்ரீமந்நாராயணனுக்கே நிருபாதிக ஶேஷங்கள் அவைகளில் அடியேனுக்கு ஸம்பந்தம் இல்லை என்கிற புத்தி ஸ்வரூப ஸமர்ப்பணம். அடியேனையும் அடியேனுடைய வஸ்துக்களையும் ரக்ஷிக்கிற பரம் பெருமாளுடையது. அதில் அடியேனுக்கு ஸம்பந்தமில்லை என்கிறது தான் பரஸமர்ப்பணம், அடியேனுடைய ரக்ஷணபலமும் அடியேனுடைய வஸ்துக்களை ரக்ஷிக்கிற பலமும் பெருமாளுடையது தான், அதில் அடியேனுக்கு ஸம்பந்தமில்லை என்கிற புத்தி தான் பலஸமர்ப்பணம். ஆக ஸ்வரூபஸமர்ப்பணம் இரண்டு, பரஸமர்ப்பணம் இரண்டு, பலஸமர்ப்பணம் இரண்டு என ஷடம்ஶங்கள்.

த்வயமந்த்ரம் வர்ணயம். அதிலே ஸ்ரீமந்நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே என்கிற பூர்வவாக்யத்துக்கு, 'அகிஞ்சனனான அடியேன் ஜகந்மாதாவாய் வாத்ஸல்யைகஸ்வபாவையாய் ஸமஸ்த ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாத வாத்ஸல்யாதி குண விஶிஷ்டனான எம்பெருமான் திருவடிகளை நிரபேக்ஷ ரக்ஷகங்களாக நிஶ்சயித்து ஆநுகூல்ய ஸங்கல்பாத்யங்க விஶிஷ்டமான ஸ்வரூப பல த்யாகஸமர்ப்பணமாயும் அத்யந்த பாரதந்த்ர்யாநுஸந்தான விஶிஷ்டமுமான பரஸமர்ப்பணத்தை பண்ணுகிறேன்' என்பது தாத்பர்யம்.



ஸ்ரீமதே நாராயணாய நம: என்கிற உத்தரவாக்யத்துக்கு, ஸர்வ ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரோடே கூடிக்கொண்டு இருக்கிற நிரதிஶய போக்யனாய் ஸர்வஸ்வாமியான பெருமாளுடைய கைங்கர்யத்தின் பொருட்டு ஆகக் கடவென். அடியேனுக்கு ஒரு அநிஷ்டமும் இல்லாமலிருக்க வேண்டுமென்று தாத்பர்யம்,

அத்யந்தாகிஞ்சனனான அடியேன் ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமாக ஸ்ரீமந்நாராயணனு திருவடிகளிலே கைங்கர்யம் பண்ணுவதற்காக ஸ்ரீமந் நாராயணனு திருவடிகளை உபாயமாகப்பற்றி ஸாங்கமாக பரஸமர்ப்பணத்தைப் பண்ணுகிறேன் என்பது த்வயத்தின் திரண்ட பொருள்.

ஸ்ரீமந் நாராயண—என்று இரண்டு ஸம்புத்திகளாக்கி, தவ என்று ஒரு பதத்தை அத்யாஹரித்துப் பண்ணுகிற யோஜனை புண்டென்று பக்ஷாந்தரமும் காட்டப்பட்டது. அப்போது உத்தரவாக்யத்தில் "நாராயணாய" என்கிறதற்கு விஶேஷணமாக "தாஸ்யம்" என்று அத்யாஹரித்து "பவேயம்" என்று அத்தோடே யோஜிக்க வேண்டும்.

ஸ்ரீமந்நாராயணஶப்தம் ஸர்வஸ்வாமியான ஸ்ரிய:பதி வாசகமாகையாலே ஸ்வாமிவிஷயத்தில் தாஸனுக்கு ஆநுகூல்யாசரணமும் ப்ராதிகூல்ய வர்ஜனமும் உசிதமாகையால் அந்த ஸ்ரீமந்நாராயண ஶப்தத்தாலே ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜனமும் ஸூசிதங்கள்.

ஶரணஶப்தம் "ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக:" என்கிற ப்ரமாணத்தாலே உபாய வாசகமாகையால் ஶரண ஶப்தாவ ருஷ்ட ஸாபேக்ஷ்யாதாவாலே உபாயத்வாத்யவஸாய ரூபமான மஹாவிஶ்வாஸம் சொல்லப்படுகிறது.

ப்ரபத்யே—பதியாதோம் கதியர்த்தங்களாக ஜ்ஞானார்த்தமாகையாலே கோப்த்ருத்வ வரண ஸ்வரூப ஸமர்ப்பண விஶிஷ்டமான அத்யந்த பாரதந்த்ர்யாநுஸந்தான விஶிஷ்ட பரஸமர்ப்பண ரூபமான ஜ்ஞானங்களை சொல்லுகிறது.

உத்தம புருஷன்—ஔசித்யத்தாலே ஆகிஞ்சந்யாநுரூபாதிகாரத்தை ஸூசிப்பித்து தத்ஸஹாயாதி ரூப கார்பண்யத்தைக் காட்டும்.

1. ஸர்வஜ்ஞ ஸர்வஶக்தி யுக்தனான எம்பெருமான் ப்ராப்தி விரோதிகளான அநந்தாபராதங்களை யுடையவனுக்கு அளவில்லாத பலத்தைத் தருகையும், 2. கர்மாநுரூப பல ப்ரதனான எம்பெருமான்

தருகையும், 3. ஸர்வப்ரகார நிரபேக்ஷனான எம்பெருமான் ஔதார்யத்தால் தருகையும், 4. க்ஷிப்ரகாரியன்றிக்கே இருக்கிற எம்பெருமான் தாழாதே தருகையும், 5. ஸமாப்யதிக தரித்ரனான ஸர்வேஶ்வரன் தரம்பாராதே தருகையும் கூடுமோ வென்று ஶங்கா ஸம்பவம் வரும்.

(1) ஸர்வஜ்ஞ ஸர்வசக்தி யுக்தனா யிருந்தானேயாகிலும் மறக்க வொண்ணாத பக்ஷபாத விசேஷத்தாலே அபிமத விரோதிகளான அபராதங்களை க்ஷமித்து அபிமதப்ரதனும். (2) அவாப்த ஸமஸ்த காமனேயாகிலும் ப்ரபத்தி மாத்ர வ்யாஜத்தாலே ப்ரஸந்நனாய் ஸ்வாமித்வ தாஸத்வ ஸம்பந்தம் நிருபாதிகமாக அளவில்லாத ஃபலத்தையும் தரும். (3) அவாப்த ஸமஸ்தகாமனாகையால் ஸர்வப்ரகார நிரபேக்ஷனே யாகிலும், தன் நிருபாதிக காருண்யாதிகளாலே கார்யம் செய்யும். (4) க்ஷிப்ர காரியல்லனாகிலும் அநந்ய ஶரணனுடைய ப்ரபத்திக்கு ஔதார்யாதி குண ஸஹிதமான தன் ஸங்கல்பத்தாலே இவன் கோலின காலத்தில் அபேக்ஷித்ததைக் கொடுக்கும். (5) ஸமாப்யதிக தரித்ரனே யாகிலும் ஸ்வாதந்த்ர்யாதி குண விசிஷ்டனாய் தன் ப்ரயோஜனமாக அபேக்ஷிதத்தை தரம் பாராதே கொடுக்கும்.

இப்படிப் பிறந்த ஶங்கைகளுக்கு யதா ஸம்பவம் பரிஹார மூண்டாகையாலே—ப்ரபத்தி அபேக்ஷித ஸாதந மாத்திரத்திற்கு பாதக மில்லாதபடியாலே மஹாவிஶ்வாஸம் நிர்விவாதமாயிருக்கும்.

இவ்விடத்தில்,

அஜ்ஞத்வம் ஸக்ருதேவ ஹந்த கலுஷம் ஸர்வம் ததோ நஶ்யதி
ப்ரஹ்மேஶாதி ஸுதுர்லபம் ஸகலவித் ப்ராப்யம் யதோ த்ராகிதி ।
விஶ்வாஸ ப்ரதிபந்தி சிந்த ந ஶிகம் பத்யுஸ்ஸ்வதஸ் ஸத்தாம்
ஸம்ராஜீஶ ரக்ஷாபதித்வ ஸந்நாஹம் நாராயணஸ்த்வம் தவ ॥

என்று ந்யாஸதிலகத்தில் பிள்ளை யருளிச் செய்தார். "அஜ்ஞத்வம் ஸக்ருதேவ" என்கிறத்தாலே ப்ரதம த்ருதீய ஸம்ஶயங்களைக் காட்டினார். "ஹந்த கலுஷம் ஸர்வம் ததோ நஶ்யதி" இத்யாதியாலே த்விதீய ஸம்ஶயத்தைத் தந்த்ரேண வெளியிட்டார் "யதோ" என்கிறத்தாலே—பஞ்சம ஸம்ஶயத்தைச் சொன்னார். "த்ராக்" என்கிறத்தாலே சதுர்த்த ஸம்ஶயத்தைத் தெரியப்படுத்தினார். இவைகளை உத்தரார்த்தத்தாலே பரிஹரிக்கிறார். "ரக்ஷாபதித்வ ஸந்நாஹம்" என்கிறத்தாலே ப்ரதம ஸம்ஶய பரிஹாரகமான பக்ஷபாத ஸம்பந்தமும் சொல்லப்படுகிறது. நாராயணஸ்த்வம் என்கிற விடத்தில் அந்வர்த்தத்தாலே த்விதீய ஸம்ஶய பரிஹாரகமான ஸ்வாமித்வ



ரூப ஸம்பந்தமும் சொல்லப்படுகிறது. அந்த ப்ரத்யயாந்த நார ஶப்தத்தாலே அவஶிஷ்ட ஸம்ஶய பரிஹாரக த்ருதீயம் சொல்லப்படுகிறது. "ரக்ஷாபதித்வ ஸந்நாஹம்" என்கிறத்தாலே நாராயணத்வம் முமுக்ஷு கடாக்ஷாயத்தத்வம் என்கிறது பிள்ளைக்கு ஸம்மதம் என்றதாயிற்று. "ஶ்ரியா தேவோ தேவஸ்ய உபாந்தே" என்கிற வேதாந்த ப்ரமாணமாக. "ஸ்வாம்யா ஸஹயாம்யஃ" என்று பட்டர் அருளிச் செய்தாரிறே. "ஸம்ப்ரயாதேஶ்வரேஶ்வரீ" என்று அவளுக்குத் திருநாமம். "யத்ப்ரூபங்காஃ ப்ரமாணம்" என்று பட்டர் அருளிச் செய்தார். இவ்வர்த்தத்தை ஸ்ரீ ஸம்ஹிதாபாஷ்ய ப்ரயோகத்தாலே பெரிய ஜீயரும் ஸங்க்ரஹித்தார். ஶ்ரியா ஸார்த்தம் தேவோ தேவஸ்ய நிரங்குஶைஶ்வர்யம் அநந்தே ப்ரவர்த்ததி என்று பாஷ்யத்திலே அருளிச்செய்தார். ஸ்த்ரீப்ரத்யயம் ஶ்ருதிஷ்டமாகையாலே பாதகமன்று.

இந்த ப்ரபத்தியை ஸாத்விக த்யாகத்துடன் செய்ய வேண்டும்.

ஸாத்விகத்யாகமாவது—கர்த்ருத்வத்யாக மமதாத்யாக ஃபலத்யாக ஃபலோபாயத்வத்யாகம் ॥ கர்த்ருத்வத்யாகமாவது—எம்பெருமான் செய்விக்க அடியேன் செய்கிறேன் என்கிற புத்தி. மமதாத்யாகமாவது—எல்லாம் எம்பெருமானுக்கே நிருபாதிக ஶேஷம் என்கிற அத்யவஸாயம். ஃபலத்யாகமாவது—ஸர்வஃபலமும் எம்பெருமானுடைய ஸந்தோஷார்த்தம் தான் என்கிற நிச்சயம். ஃபலோபாயத்யாகமாவது—எம்பெருமானே ஸர்வ ஃபலத்துக்குக் காரணம்; அடியேன் பண்ணுகிற ப்ரபத்தியும் அவருடைய ப்ரஸாதஜநகம் என்கிற தெளிவுதான்.

1. ஶ்ரிஞ் ஸேவாயாம்—2. ஶ்ரிஞ் ஶ்ரவணே—3. ஶ்ரு ஹிம்ஸாயாம் 4. ஶ்ரா பாகே என்கிற தாதுக்களிலே ஸ்ரீஶப்தம் வ்யுத்பந்நம். (பூம நித்யயோகே அதிஶாயநே) என்கிற ஶாஸ்த்ரத்தால் நித்யயோகத்தைச் சொல்லுகிறது. (ஜஜ்ஞே நாராயணோ நரஃ) என்று இருப்பதாலே நர ஶப்தம் ஸமவாய ஸம்பந்தி குணங்களைச் சொல்லும். உத்தரவாக்யத்துக்கு ஶ்ருதிஸம்மதியேயும் "அதர்வஶிரஸ்யதீதே" என்கிற ஸூத்ரத்தாலே தாதர்த்யே ஶேஷத்வம் அர்த்தமானாலும், அது நித்யஸித்தமாகையாலே அபூர்வ அநுஷ்டாநாயாயக ஜ்ஞாநகார்யமான கைங்கர்யம் அர்த்தஸித்தியாலே சொல்லப்படுகிறது. "ஸர்வம்" என்று ஒரு பதம் அத்யாஹாரம். மேல் வாக்யத்தில் ஸர்வம் என்றாவது ஸர்வாஸ் என்றாவது ஒரு பதம் சேர்த்துக்கொள்ள வேணும். ஸ்ரீமத்-ஸர்வ ஸ்வாமிநியாய் பக்ஷபாதகார ஹ்ருதயையாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியாரோடே பிரிவில்லாத, நாராயண—வாத்ஸல்யாதி குண விசிஷ்டரான எம்பெருமானுடைய, சரணார—திருவடிகளை, ஶரணம்—நிரபேக்ஷ ரக்ஷகங்களாக, ப்ரபத்யே—

அகிஞ்சனனடியேன் அத்யவஸித்து ஸ்வாமிவ ஸஹ்ருதயனான மஹாத்மான் அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூப விசிஷ்ட ஆத்மவிசிஷ்டமான ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணத்தைப் பண்ணுகிறேன். (ஸ்ரீமதே) ஸர்வ ஸ்வாமினியான பெரிய பிராட்டியாரோடே பிரிவில்லாத, (நாராயணாய) ஸௌசீல்யாதி குண விசிஷ்டனான நாராயணனுடைய கைங்கர்யத்தின் பொருட்டு; (நமம) ஆகக் கடவேன். நம: என்றதோடே ஸ்வார்த்த என்று கூட்டினால் அடியேனுக்கு ஒரு அநிஷ்டமும் உண்டாக வேண்டாம் என்னுதல் அபிப்ராயம்.

இந்த ப்ரபத்தி அதிகாரி வைலக்ஷண்ய ஸாதன வைலக்ஷண்ய க்ரியா வைலக்ஷண்ய ஸஹிதமாய் இருந்தால் அந்த ஸாதனத்தை அநுஷ்டித்தவனுக்கு விளம்பமன்னியில் கார்யம் கைகூடும். யதா கதஞ்சித் பண்ணினாலும் ஸ்ரீய:பதி விஷயமாகையாலே விளம்பித்தாவது ஸபலமேயாகும்.

அதிகாரி வைலக்ஷண்யமாவது—உக்தமான அதிகாரம் ஸம்பூர்ணமாகை. ஸாதன வைலக்ஷண்யமாவது—உக்தமான அங்கங்கள் ஸம்பூர்ணமாகை. க்ரியா வைலக்ஷண்யமாவது—ஸத் ஸம்ப்ரதாயமுற்றிருக்கை. ஸத் ஸம்ப்ரதாயமாவது— ஸ்ரீய:பதியைத் தொடங்கி வந்த ஸம்ப்ரதாயத்தை உடைத்தாய் [illegible] ஸார்வஜ்ஞ ஆசார்யனாலே உபதேசிக்கப் பெறுகை. ப்ரபந்நர்களுக்கு உபாஸ்யமாவது [illegible] ஸர்வ யோஜநாந்தர ஸம்பந்தம்—[illegible] என்கிற பழுதற்றிருக்கை. இந்த ப்ரபத்தாவாசார்யன் இந்த ப்ரபத்தனுடைய ப்ரஸாத ஸம்வாதத்தாலேயாவது [illegible] ப்ரஸாத ஸம்வாதத்தாலேயாவது பரிஹரணீயமான [illegible] மல் [illegible] வைலக்ஷண்யமன்றிலே இருக்க [illegible] ப்ரஸக்தமானால் [illegible] ப்ராயச்சித்தமாவது [illegible] ப்ரபத்தமாவது பண்ணவும்.

[illegible] ப்ரபந்நருக்கு ஸ்வாதந்த்ர்ய [illegible] திவ்யதேசங்களிலே யாவது ப்ரசஸ்தமான ஏகாந்த தேசத்திலேயாவது வஸிக்கவும், [illegible] ஸம்ப்ரதாயமான [illegible] ப்ராப்தமாக [illegible] கைங்கர்ய நிரதனாயிருக்கவும் ப்ராப்தம்.

ஸ்ரீமத் வேங்கட விநாத ஸ்ரீமத் [illegible] ப்ரபத்தி [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ:

# மடாதிபதிகளின் தர்மம்

(மஞ்ஜுபாஷிணி என்னும் ஸம்ஸ்க்ருத பத்திரிகையிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டது.)

சென்ற ஆடிமாஸத்தில் 21உல் ப்ரசுரம் செய்யப்பட்டுள்ள "மஞ்ஜுபாஷிணி" என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையில், "ஸ்வகீயர்களும் பரகீயர்களும்" என்னும் தலைப்பின் கீழ் அப்பத்ரிகையின் ஸம்பாதகர், சில விஷயங்களை விசாரிக்கப் புகுந்து, ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக மடாதிபதிகளின் தர்மத்தைப் பற்றியும் அவர்கள் இக்காலத்தில் அந்தத் தர்ம நிர்வாஹம் செய்து வருவதைப் பற்றியும் பின் வருமாறு ப்ரஸ்தாவித்திருக்கிறார்:—

"நமது மதத்தை அவலம்பித்திருக்கும் ஜநங்களுக்கு நமது மதத்தில் விசேஷித்த விச்வாஸத்தை வ்ருத்திசெய்யும் பொருட்டும் வேறு மதத்தில் அபிநிவேசம் உண்டாவதைத் தடுக்கும் பொருட்டும் ஸ்வரூப ஸம்பத்துகளான உபதேசங்களைச் செய்வதற்காகவுமே மடாதிபதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்களென்று நாம் அநேக காரணங்களைக் கொண்டு நிச்சயிக்கிறோம். இந்த உத்தேசத்துடனேயே ஏராளமான ஸம்பத்தும் அந்த மடாதிபதிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், மடாதிபதிகள் தமது காலத்தையும் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஸம்பத் முழுவதையும் இந்த விஷயத்திலேயே செலவிட வேண்டியது அவச்யமாகின்றது.

இக்காலத்திய நமது மடாதிபதிகளுட் சிலர் நிரவதிகமான ஸம்பத்தை உடையவராக இருக்கையிலும், இன்னும் மேன்மேல் அர்த்தார்ஜநம் செய்வதிலேயே ப்ரயத்நிக்கிறார்களே தவிர தமது முக்ய தர்மமாயுள்ள இந்த அம்சத்தைச் சற்றேனும் கவனிக்கிறாரில்லை. அவர்களின் நடவடிக்கைகளையும் யோக்யதையையும் நன்றாக அறிந்திருக்கும் அநேக பெரியோர்கள், 'அவர்களுக்குத் தமது வித்தாந்த விஷயமான ஜ்ஞாநமே அதிமாத்ரம் அல்பம் என்று சொல்வது அத்யுக்தி ஆகமாட்டாது' என்றும் அபிப்ராயப்படுகிறார்கள். மற்றும் சில மடாதிபதிகள், மஹாராஜர்கள் போல அநேக வைஷயிக ஸுகங்களின் அநுபவத்தில் அதிமாத்ரம் ஆஸக்தி உள்ளவர்களாய், தமது ஆச்ரம தர்மத்தை மறந்து, ஸுக ஸங்கிகளான க்ருஹஸ்தர்களுடன் கூட வஸிப்பதிலும் பத்தநம் முதலிய ஸ்தலங்களை ஆச்ரயிப்பதிலும் மஹத்தான ஔத்ஸுக்யமுள்ளவர்களாகப் பொழுது போக்குவதை எல்லாரும் பார்க்கலாம். இம்மாதிரியான பெரிய தோஷங்களுக்கு அவர்கள் பாத்ரமாவது மிகவும் சோகிக்கத் தகுந்ததே. ஆனாலும், அவர்கள், கீழ்க் கூறப்பட்டுள்ள தமது முக்ய தர்மத்தை மறக்காமல் மதாபிவ்ருத்திக்கு அபேக்ஷிதமான பரிச்ரமத்தைச் செய்துவரும் பக்ஷத்தில், விஷய ஸுகாநுபவங்களில் அவர்களுக்கு ஸம்பவிக்கும் அபிநிவேசம் முதலானவற்றை நாம் ஒருவாறு பொறுத்துப் போகலாமென்று நாம் சொல்லத் துணிவோம். உண்மையாகவே, ஜந ஸாமாந்ய விஷயத்திலும் ப்ரதாந தர்மத்தின் பரிபாலநம் அநேக பெரிய அதர்மாநுஷ்டானத்தையும் அநாதரிக்கச் செய்யப் போதுமான தென்று

மஹா ஜநங்களால் சொல்லப்படுகின்றது. அம்மாதிரியான ப்ரதா:ந தர்ம பரிபாலநம் கூட இம்மடாதிபர்களின் விஷயத்தில் காணப்படவில்லையே என்று நாம் வருந்துகிறோம்.

க்ரைஸ்தவ மதத்தை ப்ரசரிப்பதற்காக இதர தேசங்களிலிருந்து இந்தத் தேசத்திற்கு வந்திருக்கும் பாதிரிகள், தமது தர்மத்தை மிகவும் ஜாகரூகர்களாக நிர்வஹித்து வருவதை நாம் ப்ரதி திநமும் பார்த்து வருகிறோம். வித்யா சாலைகளென்றும் வ்யவஸாய சாலைகளென்றும் வைத்ய சாலைகளென்றும் ஜநோபகாரகங்களான அநேக சாலைகளைப் பல விடங்களில் ஸ்தாபித்து, அவைகளின் வழியாக மஹா ஜநங்களுடைய ஸஹவாஸத்தைப் பெற்று மிகத் தந்த்ரமாக அவர்கள் தமது மநோரதத்தை ஸாதித்துக் கொள்ளவில்லையா? அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள வைத்திய சாலைகளுக்குச் சிகித்ஸை செய்து கொள்வதை உத்தேசித்துப் போகும் ஹிந்து ஜநங்களுக்கு, அவர்கள், சிகித்ஸை முதலியன முடிந்த பிறகும் சற்று நேரம் அவர்களை அவ்விடத்தில் நிறுத்திக்கொண்டு தமது மதத்தைப் பற்றி உபந்யாஸங்களைச் செய்தும், தமது மதத்தில் சில அம்சங்களை ஏற்றத்துக்குக் காரணம் போலக் காட்டியும், இன்னும் இம்மாதிரியான பல உபாயாந்தரங்களால் ஜநங்களின் மநஸ்ஸைத் தமது மதத்தைக் குறித்து ஆகர்ஷிக்கவில்லையா? இவையன்றோ மதப்ரசாரம் செய்பவர்களின் ஊக்கத்தை ஸூசிப்பிக்கும் சிஹ்நங்கள்? இம்மாதிரியான சிஹ்நங்களில் ஏதாவது ஒன்று நமது மடாதிபதிகளிடம் காணப்படுகின்றதோ?

இது மாத்ரமன்று. ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் நமது பூர்வாசார்யர்களுடைய வர்ஷோத்ஸவங்களை, நமது ஆஸ்திகர்கள், அந்தந்த ஆசார்யர்கள் அவதரித்த விடங்களிலும் வேறு இடங்களிலும் மஹத்தான கோலாஹலத்துடன் நடத்தி வருகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆயிரக் கணக்காக ஜநக்கூட்டங்கள் அக்காலங்களில் அவ்விடங்களில் சேருகிறார்கள். ததீயாராதநம் முதலிய ஸம்ருத்தியையும் சந்தநம் முதலிய அலங்காரங்களின் பெருமையையும் அநுபவித்துக் கொண்டு இந்த அநுபவமே உத்ஸவத்தின் பரம ப்ரயோஜந மென்னும் எண்ணத்துடன் எல்லாரும் த்ருப்தி அடைகிறார்களே தவிர, தம்மால் கொண்டாடப்படும் ஆசார்யருடைய யோக்யதை என்ன, அவருடைய குணங்கள் யாவை என்பது முதலியவற்றைப்பற்றி யாராவது ஒருவர் ஒரு வார்த்தை சொல்வது உண்டோ? அக்காலங்களில் க்ரைஸ்தவப் பாதிரிகள் ஒவ்வொரு வீதியிலும் ஜநங்களைக் கூட்டம் கூட்டமாகச் சேர்த்துக் கொண்டு தமது மதப்ரபாவத்தை உபதேசிப்பதைத் தான் எல்லாரும் பார்க்கிறோம். இவர்களைப் பார்த்தும் நமது மடாதிபதிகளுக்குத் தமது தர்மாநுஷ்டாநத்தைப்பற்றி ஸ்வல்பமேனும் லஜ்ஜை ஜநிக்கவில்லையே!

உண்மையாகவே, நமது மடாதிபதிகள், ஸித்தாந்த ப்ரசாரத்தைக் குறித்து என்ன கார்யம் செய்து வருகிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. 'எவ்வளவு ஜநங்களைச் சரியான உபதேசாதிகளால் நமது மதத்தில் ப்ரவேசிப்பித்திருக்கிறார்கள்? அதற்காக என்ன ப்ரயாஸங்களை இவர்கள் அநுபவித்திருக்கிறார்கள் ? இதர மதஸ்தர்களான வித்வாங்களால் நமது மதத்தின் மீது ஆரோபிக்கப்படும் தூஷணங்களை யுக்திகளுடனும் ப்ரமாண புரஸ்ஸரமாகவும் கண்டிக்க யாராவது ப்ரயத்நப்பட்டது உண்டோ ?' இத்யாதியான ப்ரச்நங்களைச் செய்யும் ஜநங்களுக்கு என்ன ஸமாதாநம் சொல்லுகிறது என்பதை நாம் அறிகிறோமில்லை.



" ஹிக்ஷந்தி பிக்ஷுஜந ரக்ஷண தக்ஷிணாந்தி
மாத்யந்தி மாத்ருத ஸமோபயதி க்ருதாந்தே ।
த்ரம்யேவ ஸம்ப்ரமண தொர்யூயதி ப்ரவாணா:
ஸந்த்யாவிநோதவிதயே ஸததம் யதாயா ॥ "

என்று அநுக்ரஹித்திருக்கும் ஸ்ரீ தேசிகனுடைய முகத்தில் கண்ட சர்க்கரையன்றோ போடவேண்டும் ? "

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1) ஸ்ரீ வாநமாமலை ஜீயர்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

போனவருஷம் வைகாசிமாஸம் திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரியிலிருந்து இப்பொழுது மடத்தில் எழுந்தருளி யிருக்கிற ஸ்வாமி ஸஞ்சாரமாகப் புறப்பட்டு மதுரை, ராமநாதபுரம் திருச்சிநுப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களில் எழுந்தருளி ஸமாச்ரயணமும் உபந்யாஸ காலக்ஷேபங்களும் சிஷ்யர்களுக்கு செய்துகொண்டு மன்னார் குடிக்கடுத்த சேரன்குளத்தில் போன வருஷம் சாதுர்மாஸ்யத்துக்கு எழுந்தருளிப் பிறகு இந்தப் பிரதேசம் எழுந்தருளினார். ஸ்வாமி வெகுநாளாய் வாநமாமலையைவிட்டு வெளிஸஞ்சாரம் வராததால் அநேக ஆயிரம்பேர் சமாச்ரயணம் செய்துகொண்டார்கள். வித்வத் ஸதஸ் ஒன்று போன வருஷம் சேரன்குளத்தில் நடந்தது. வித்வான்களுக்கு தகுந்த ஸம்மானங்கள் கொடுக்கப்பட்டன.

பிறகு கும்பகோணம், சித்ரகூடம் என்னும் சிதம்பரம், கூடலூர் திருப்பதி முதலிய ஸ்தலங்கள் வழியாக சித்திரை மாஸம் திருவல்லிக்கேணி க்ஷேத்ரத்திற்கு எழுந்தருளினார். சுமார் 20 வருஷத்திற்கு முன் பதரிகாச்ரம யாத்ரையாய் ஸ்வாமி வடக்கே எழுந்தருளுவதற்கு முன் இவ்விடம் எழுந்தருளி யிருந்ததற்குப் பிற்பாடு இந்தப்பக்கம் எழுந்தருளவில்லை. நாளாய்விட்டதால் வெகுபேர்கள் ஸமாச்ரயண மாகாம லிருந்தார்கள். இந்தத் தடவை இங்கே எழுந்தருளின பிறகு சுமார் 5,000 பேருக்கு ஸமாச்ரயணமாயிற்று. ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீ உடையவரையும் மற்றும் பூவிருந்தவல்லி சிங்கப்பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்துவிட்டு சாதுர்மாஸ்ய ஸங்கற்பம் திருவல்லிக்கேணியில் வெகு விமர்சையாய் அநேக வித்வான்களுடனும் வைதிக கோஷ்டியுடனும் நடந்தது. பேயாழ்வார் அவதாரஸ்தலமாகிய மைலாப்பூரில் ஸ்ரீ கேசவன் மாதவன் ஸந்நிதிகளுக்கு எழுந்தருளி ஆழ்வார் எம்பெருமான்களையும் மங்களாசாஸநம் செய்தார். அங்கங்கே எழுந்தருளின இடங்களில் தகுந்த மரியாதைகள் நடத்தப்பட்டன. திநம் ஸ்ரீ பகவத்விஷயம் 36000ப்படி காலக்ஷேபம் நடந்துவருகிறது. திநம் ஒருபாட்டு 2 பாட்டுத்தான் நடக்கிறது முதல்நாலு பத்து முடிந்து விட்டது. ஸ்வாமியின் உபய வேதாந்த ஜ்ஞாநம் அபாரம் என்று எல்லாருக்கும் தெரிந்த

விஷயம். தினம் வித்வான்களும் மற்றவர்களும் சுமார் ஐம்பது பேருக்குக் குறையாமலும் 100-பேருக்கு மேற்படாமலும் காலக்ஷேபத்திற்கு எழுந்தருளுகிறார்கள். ஸ்வாமி வித்வத் பக்ஷபாதி. கனபாடிகளும் த்ரிமத வித்வான்களும் அடிக்கடி ஸந்நிதிக்கு எழுந்தருளுகிறார்கள். அவர்கள் தகுந்த ஸம்மானம் பெறுகிறதாகக் கேள்விப்படுகிறோம்.

திருவல்லிக்கேணி மடத்திற்கு உபய வேதாந்தத்திலும் ஸ்ம்ருதிகளிலும், ஒரு சிறு புஸ்தகசாலை ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கிறார். சில வருஷகாலமாய் திருவல்லிக்கேணியில் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு உபய வேதாந்தம் உபதேசித்துக் கொண்டிருக்கும்படி ஒரு நல்ல பண்டிதரை நியமித்திருக்கிறார்.

முன் யாத்திரை எழுந்தருளினபொழுது வடக்கே ஒரு பெரிய ஸதஸ் நடத்தி சம்பிரதாய வைஷ்ணவவித்வான்களை சுமார் 500 பேரை வரவழைத்து ஒருவைஷ்ணவ மஹாஸபை கூட்டி பரஸ்பர அபிவிருத்தியாகும்படி சில உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. ஜமீந்தார்கள் ராஜாக்கள் லௌகிக ப்ரமுகர்கள் ஸுமார் 1000 பேர்களும் சிஷ்யாள் 4000 பேரும் அதற்கு வந்திருந்தார்களாம்.

இப்போது சீக்கிரத்தில் ஸ்வாமி ஆந்திரதேச யாத்திரை எழுந்தருளப் போகிறார். எழுந்தருளுவதற்கு முன் ஒரு வித்வத்ஸதஸ் நடத்தப் போவதாயும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயங்களில் சில உபந்யாஸங்கள் சில வித்வான்கள் நடத்தும்படி ஏற்பாடு செய்வதாகக் கேள்விப் படுகிறோம். வானமாமலையில் ஒரு உபய வேதாந்த ஸாஹித்ய பாடசாலை ஸ்தாபித்து வித்யார்த்திகளுக்கு ப்ரஸாத ஸ்வீகாரத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பாடசாலை மேலான ஸ்திதிக்கு வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். வேதாந்த வித்யையும் ஸநாதன மதமும் வித்வான்களும் வ்ருத்தி யாவதற்கு இந்த மடத்திலும் மற்ற மடங்களிலும் எவ்வளவு செய்தாலும் போதாது என்பதை எல்லாரும் கவனிக்க வேண்டும்.

ஒரு ஆஸ்திகன்.

## (2) உபாகர்ம விசாரம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு :—

இவ்வருஷம் சென்ற ஆடி மீ 28உ வெள்ளிக்கிழமை தினம் சிலர் தைத்திரீய யஜுருபாகர்மம் செய்யவேண்டுமென்றும் சிலர் 29உ சனிக்கிழமைதான் செய்யவேண்டுமென்றும் சாஸ்திரங்களைக்கொண்டு தீர்மானித்து நடத்தினார்கள். இருகக்ஷியிலும் அவரவர்களுடைய ஸாமர்த்தியத்திற்கனுகுணமான பிரமாணங்களும் யுக்திகளும் கூறப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மையோர் முதல்தினமாகிய வெள்ளிக்கிழமையே அனுஷ்டித்தார்கள். இவ்விஷயத்தில் நமக்கும் சிறிது ஸந்தேகமுண்டாய் கிரந்தங்களை யாராய்ந்து பார்த்ததுடன் சில பெரியோர்களிடம் சந்தேக நிர்ணயம் கேட்டதுமுண்டு. அச்சந்தேகமென்னவெனில்,

“ஶ்ராவண்யாம் பௌர்ணமாஸ்யாம் அத்யாயோபாகர்ம” என்ற இது முதலிய வாக்கியங்கள் ஸாமான்யமாய் உபாகர்மத்தை பௌர்ணமாஸியில் செய்யவேண்டுமென்று விதிக்கின்றன. மற்றும் சில வாக்கியங்கள் ‘பௌர்ணமாஸ்யாம் ஔதயிகே குர்யுஶ் ஶ்ராவணம் தைத்திரீயகா:’ என்று ஔதயிக பர்வத்தில் செய்யவேண்டுமென்று விதிக்கின்றன. ஔதயிக சப்தார்த்தமும் ‘ஶ்ராவணீ பௌர்ணமாஸீ து ஸங்கவாத்பரதோ யதி। ததாஔதயிகம் ஜ்ஞேயம் நான்யதௌதயிகம் விது:’ என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது எந்த தினத்தில் பௌர்ணமாஸீ உதயம் முதல் ஸங்கவம் முடியவிருக்கின்றதோ அதுவே ஔதயிகமென்றும் மற்றொன்று ஔதயிக மல்லவென்றும் அறுதியிடப்பட்டது. இத்தால் ஸாமாந்யமாய் பௌர்ணமாஸியென்று ஆபஸ்தம்பர் முதலானோர்களால் சொல்லப்பட்ட பௌர்ணமாஸீ ஔதயிக பௌர்ணமாஸியாகவிருக்கவேண்டுமென்று ஸாமான்யத்திற்கு விசேஷத்தில் பர்யவஸாநம் சொன்னதாயிற்று. இதை யொட்டியே ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில் உபாகர்ம பிரகரணத்தில் ‘ஸ்வ: க்ருத்ஸ்நம் ஸங்கவம் ஷண்முஹூர்த்தம் வா வ்யாப்நுவதீ பௌர்ணமாஸ்யௌதயிகீ। ஸைவ யஜுருபாகர்மணி க்ராஹ்யா’ என்று ஔதயிக பௌர்ணமாஸியே உபாகர்மகாலமாகக் கூறப்பட்டது. நிர்ணய ஸிந்து முதலிய கிரந்தங்களில் பௌர்ணமாஸி உபாகர்மகாலமெனச் சொல்லி அன்று உதயத்தில் அதற்கு சதுர்தசியுடன் ஸம்பந்தமிருந்தால் அதைத் தள்ளிவிடவேண்டுமென்று பிரமாண வாக்கியங்களையுதாகரித்து “நஹி வ்ரீஹ்யாதௌ நிஷித்தாஷ்டமீ க்ரஹணம் யுஜ்யதே” என்று எவ்விதத்திலும் சதுர்தசிஸம்பந்தம் தள்ளத் தகுந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் அக்கிரந்தகாரராலும் ஔதயிக காலம் தான் அங்கீகரிக்கப்பட்டதாக வேற்படுகிறது. வைத்யநாத தீக்ஷிதகிரந்தத்திலும் (உபாகர்மபிரகரணத்தில் யாதொன்றும் சொல்லாவிட்டாலும்) திதி நிர்ணயகாண்டத்தில் சதுர்தசிவேதை பௌர்ணமாஸிக்கு ஸாவித்ரீ விரதம் ஒன்று நீங்கலாக மற்ற விரதம் முதலியவைகளுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தசநிர்ணயத்தில் சதுர்தசி வேதையைப்பற்றி யாதொன்றும் பிரஸ்தாவமில்லையே யெனில் ‘அநுக்தமந்யதோ க்ராஹ்யம்’ என்கிற நியாயப்படி ஒன்றிலில்லாததை விரோத மில்லையேயாகில் மற்றொன்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாமென்றாகலாம். அல்லது ஔதயிக சப்தத்தால் உதயகாலம் தொடங்கி யிருக்கும் பௌர்ணமாஸி ஔதயிகம் என்று கிடைப்பதால் உதயத்தில் சதுர்தசி ஸம்பந்தமிருந்ததேயாகில் அப்பௌர்ணமாஸி ஔதயிகமாகக் கூடாததலால் ஔதயிக சப்தத்தாலேயே சதுர்தசீ வேதையுள்ள பௌர்ணமீ விலக்கப்பட்டு விட்டதெனத் தெளிவாகிறதாகவுமாம். ஆகையால் இவ்வருஷம் முதல் தினம் வெள்ளிக்கிழமை சதுர்தசி 14 நாழிகையிருப்பதால் அதற்கு மேற்கொண்டு வரும் பௌர்ணமாஸி ஔதயிகமாகக்கூடவுமில்லை. சதுர்தசி ஸம்பந்தத்தால் விலக்கப்பட்டும் விட்டது. ஆகையால் அன்றைய தினம் எவ்வாறு உபாகர்மம் அனுஷ்டிக்கக் கூடும்? மறுதினமும் ஸங்கவாந்த வியாப்தியில்லையே யெனில் அதற்காக நிஷித்தகாலத்தில் செய்வது உசிதமாகுமா? ‘ஸங்கவாத்பரத: ப்ராக் சேத் தத்ர கார்யா பௌர்ணமீ க்ரியா’ என்று மறுதினம் ஸங்கவாந்தம் வரையில் பௌர்ணமீ இல்லையேயாகில் முதல் தினம் அனுஷ்டிக்க வசனமிருக்கிறதெனில் அவ்வசனம் சுத்த பௌர்ணமீ முதல் தினமிருந்தால் அதை எடுத்துக்கொள்ளும்படி சொல்லுமே யல்லாது சதுர்தசியுடன் கூடியதையும் எடுத்துக்கொள்ளச் சொல்லமாட்டாது. அப்படியாகில் சதுர்தசீ ஸம்பந்தத்தை விலக்கும் வசனங்கள் வீணாய்முடியும். அது உசிதமாகுமோ? ஆகையால் மற்றோரிடத்தில்

ஸாவகாசமாகப் போகக்கூடிய வாக்கியத்தைக்கொண்டு சதுர்தசிவேத நிஷேதவாக்கியங்களை எவ்வாறு உபேக்ஷிப்பது? ஆகையால் உதயம் முதற்கொண்டு ஸங்கவாந்தவியாப்தமான பர்வமே உபாகர்மத்திற்கு முக்கிய காலமெனத் தீர்மானித்திருப்பதால் முதல் தினம் அப்படிப்பட்ட பர்வம் இல்லாமையாலும் மறுதினமும் ஸங்கவாந்த வியாப்தி யில்லாத போதிலும் உதயம் முதற்கொண்டு ஸங்கவத்தின் ஏகதேசத்திலாவது ஸம்பந்த மிருக்கிறதெனவைத்து மறுதின மனுஷ்டிப்பதே உசிதமாகாதா என்று.

இச்சந்தேகத்திற்குச் சமாதானம் பின்வருமாறு சில மஹான்கள் கூறியுளர். அவற்றில் முதலாவது—ஆபஸ்தம்பர் உபாகர்மத்திற்கு கேவல பௌர்ணமாஸியே காலமென்றார். ஔதயிக பௌர்ணமாஸியைச் சொல்லவில்லை, ஸ்ரீதரகோபிலாதிகள் ஔதயிக பர்வத்தை உபாகர்மகால மென்றார்கள். ஆனபோதிலும் ஔதயிக சப்தமானது பௌர்ணமாஸீ இரண்டுதினம் வியாப்தமான பௌர்ணமாஸியில் பரிபாஷிதயாயிருக்கிறது. அப்பேர்க்கொத்த ஔதயிகபர்வத்தின் அலாபத்தில் சதுர்தசிவித்தையான பௌர்ணமாஸியும் எடுக்கத் தகுந்ததென்பது 'ஸாயீ: ஸங்கவத: வ்யாகு ஔது ...கிரியா' என்கிற வசனவித்தமான படியால் நிர்ணயஸிந்துவில் கூறியுள்ள நியாயம் பிரவர்த்திக்கமாட்டாது, என்று.

இரண்டாவது—சிலவாக்யங்கள் உபாகர்மத்திற்கு பௌர்ணமாஸியையும் மற்றும் சில ஔதயிக பர்வத்தையும் காலமாக விதிக்கின்றன. இங்கு முதலில், ஸாமானியமாய் விதித்த பௌர்ணமாஸி காலத்தை ஔதயிக பௌர்ணமாஸியாகிற விசேஷத்தில்பரியவஸிப்பது உசிதமா, அல்லது எப்பொழுது பௌர்ணமாஸி இரண்டு தினத்திலு மிருக்கின்றதோ அப்பொழுது என்றையதினம் எனச் சந்தேகமுண்டானபொழுது ஔதயிக பௌர்ணமாஸியில் செய்ய வேண்டுமென்று நியமிக்கின்றதா என்று விசாரித்தல் ஔதயிகம் என்கிற குணத்துடன் கூடிய காலத்தை விதிக்கின்றதாக அங்கீகரித்தால் விசிஷ்டவிதி யென்று அங்கீகரிக்க வேண்டிய கிலேசமுண்டாகிறது. நியமத்தை மட்டும் போதிக்கின்றதெனில் லேசாக விருக்கும். மேலும் சந்தேகம் வந்தபொழுது சந்தேக நிர்ணயம் செய்கிறதெனில் அபேக்ஷித விதியாகும். இல்லாவிடில் அபேக்ஷிதத்திற்கு விதியை அங்கீகரித்ததாகும். இந்தப் பக்ஷத்தில் ஸாமான்யவசனத்திற்கு ஸங்கோசமுமில்லை. சதுர்தசி வேத நிஷேதமும் இரண்டு தினத்தில் பௌர்ணமாஸீஸம்பந்தப்பட்டால் மறுதினமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைச் செவ்வனே விளக்குவதற்காக பூர்வ தினத்தை நிந்திக்க வந்த அர்த்தவாதம். இப்படியாகில் நியமத்தை விதிக்கின்ற வாக்கியத்திற்கு சேஷமாகையால் சதுர்தசி நிஷேத வாக்கியம் அத்துடன் ஒரு வாக்கியமாகச் சேரும். இல்லாவிடில் ஔதயிக வாக்யம் பிரத்யேகம் காலவிதி பரமென்றும் சதுர்தசி நிஷேத வாக்யம் நிஷேதத்தையும் விதிக்கின்றதாகவும் சொன்னால் தனித்தனியே இரண்டு வாக்யங்களாக அங்கீகரித்ததாக ஆகும். ஒரு வாக்யமாக அங்கீகரிக்க இடமிருக்க இரண்டு வாக்யங்களாக அங்கீகரிப்பது அழகல்ல. ஆகையால் சதுர்தசீ வேதைக்கு நிஷேதமில்லை யாதலால் நிர்ணயஸிந்துவில் கூறிய நியாயத்திற்கு இங்கு பிரவிருத்தியில்லை. தினத்வயவியாப்தி ஸ்தலத்தில் தான் ஔதயிக பர்வத்தை யெடுக்க வேண்டுமென்பதை யொட்டியே ஸ்ம்ருதி ஸங்கவம்—என்று

ஸ்ம்ருதி ரத்னத்திலும் காணப்படுகிறது கேவல உதய ஸங்கவவியாப்தியையோ அல்லது கேவல உதயவியாப்தியையோகௌண காலமாகவைத்து மறுதின மனுஷ்டிக்கலாகாதோ



வெனக்கூறுவதும் சரியன்று. ஏனெனில்—உதயவியாப்தி ரூபமான யதாசுருதார்த்தத்தைத் தள்ளுவதற்காகவே பிரவர்தித்த 'ஸங்கவாந்தவியாப்த மௌதயிகம், மற்றது ஔதயிகமல்ல' என்கிறவாக்யங்கள் முற்றிலும் வீணாய் முடியும். 'ஸாயீ: ஸங்கவத: வ்யாகு ஔது ...கிரியா' என்று ஸங்கவாந்தத்திற்கு முன் பர்வ பிரதிபத் ஸந்தியானால் முதல் நாள் செய்யவேண்டுமென்றிது முதலியதும் வீணாகும். இது ஒருசமயம் பூர்வதினம் சதுர்தசி வேதையில்லாமல் சுத்தமாகில் அதை எடுத்துக் கொள்ளச் செல்லுகின்றதோ வென்பதும் அனுசிதம். அப்படியாகில் முதல் தினம் உதயம் முதலாரம்பித்த பௌர்ணமாஸி மறுதினம் ஸங்கவாந்தம்வரையிலிருக்கக் கூடாமையால் ஸங்கவாந்தத்திற்கு முன்" என்கிறவிசேஷணம் வீணாகும். ஆகையால் இவ் வருஷம் முதல்தினமே அனுஷ்டிப்பது பிராமாணிகம் என்று.

இவ்விரண்டு ஸமாதானங்களையும் நன்கு கவனிக்குங்கால் மேற்கூறிய சந்தேகஞ்சன்யமையும் நிவிருத்தியாம் என்பதற்குச் சந்தேகமில்லை. முதல் ஸமாதானத்தில் சதுர்தசி வேதைநிஷித்தமாயிருந்தாலும் வசனபலத்தைக்கொண்டே பிரவர்த்திக்கிறோமானதால் பாதகமில்லை யென ஏற்படுகிறது. அதாவது—சதுர்தசீ வித்தபௌர்ணமீ கூடாதென்று ஸாமானியமாய் நிஷித்தமாயிருந்தாலும் மறுதினம் ஔதயிகபர்வத்தின் அலாபத்தில் பூர்வதினம் எடுத்துக்கொள்ளத் தகுந்ததென்று வசன பலத்தைக் கொண்டு இழியும் பொழுது உத்ஸர்காபவாத நியாயத்தால் ஸாமான்யவாக்யம் பாதிதமாகிறதென்று கொள்ளலாம். அவ்வாறே இரண்டாவது ஸமாதானத்திலும் சதுர்தசிவேத நிஷேதவாக்யம் மறுதினம் ஔதயிக பர்வத்தில் உபாகர்மம் செய்யவேண்டுமென்கிற விதியுடன் ஏக வாக்யமாகிறது என்கிற இது முதலான யுக்திகளை யொட்டி அதற்கு சேஷமாகிறபடியால் பிரத்யேக நிஷேதமேயில்லை யென்றும் அப்படி யங்கீகரிக்காவிடில் பிரகிருதஸம்வத்ஸரம்போல் என்றையதினம் மறுதினம் ஔதயிக பர்வம் இல்லையோ அன்று 'நாநௌதயிகம்' என்ற நிஷேதத்தை மீறி அன்றைய தினத்தையே காலமாகக் கல்பிக்கவேண்டிய கிலேசம் வரும் என்றும் 'நாநௌதயிகம்' என்பதை உபேக்ஷிப்பதா அல்லது சதுர்தசிவேத நிஷேதத்தை உபேக்ஷித்து முதல்தினமே அனுஷ்டிக்கும்படி கல்பிப்பதா என 'விநிகமநாவிரஹம்' (அவியவஸ்தை) வரும் என்றும் அவற்றில் முதல் பக்ஷத்தில் 'நாநௌதயிகம்' என்பதற்கு பிரயோஜனமும் ஒன்றுமில்லாமல் போகுமென்றும் கூறி நிர்தாரணம் செய்திருப்பது மிகவும் ஸூக்ஷ்ம புத்திகளும் சிலாகிக்கத் தகுந்த விஷயமென்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை.

ஆயினும் ஆபாதமாய்ப் பார்ப்பதிலேயே நமக்கு இன்னுமொரு ஸந்தேகமுதிக்கின்றது. அதையும் இங்கு விஜ்ஞாபித்துக் கொள்கிறோம். பிராமாணிகர்கள் பராமர்சித்து தகுந்த ஸமாதானம் ஸாதித்து சந்தேகத்தை நிவிருத்தி செய்விக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம். அதாவது—முதல் ஸமாதானத்தில்—அபவாத சாஸ்திரத்திற்கு ஸாமான்ய சாஸ்திரத்தை பாதிக்காமலேயே விஷயலாபமுண்டாகும் பக்ஷத்தில் அங்கு உத்ஸர்காபவாத நியாயம் பிரவர்த்திக்காது. பிருகிருதத்தில் அபவாத சாஸ்திரமான 'ஸாயீ: ஸங்கவத: வ்யாகு ஔது' என்கிற வாக்யம் பூர்வ தினத்தில் சதுர்தசி வேதையில்லாமலேயேயிருந்தால் அதை விஷயீகரித்து ஆத்மலாபத்தை யடையலாமானதால் நிஷேதாபவாதமாகாது. 'ஸங்கவத: வ்யாகு' என்கிற சப்தத்திற்கு ஸங்கவாந்

த்திற்கு முன் என்கிற அர்த்தத்தை யங்கீகரித்தாலும் அங்கு ‘ஸம்மவாஞ்ஞத:’ என்று உத்தராவதி சொல்லப்பட்டதேயொழிய ஸ்வல்பம் ஸங்கவத்தில் ஸம்பந்தப்பட்ட பின் பர்வ பிரதிபத்ஸந்தியானால் அப்போதும் ‘ஸம்மவாஞ்ஞத: ப்ராகஸ்ஸங்கவாத்’ என்று சொல்லக் குறையில்லையாதலால் முதல் தினம் ஸூர்யோதயம் முதல் ஆரம்பித்து மறுதினம் 6-30 அல்லது 7 நாழிகை வரையில் கூட பர்வமிருக்கக் கூடுமாதலால் முதல் தினம் கட்டாயம் சதுர்தசீ வேதையிருந்தே தீருமென வைத்து அதை விரோதித்தே இவ்வசனத்திற்கு பிரவிருத்தி சொல்ல வேண்டுமெனக் கூறுவது பொருந்தும் என்றும்.

இரண்டாவதில்—லாகவத்தை யனுசரித்து நிஷேதவாக்கியத்திற்கு அர்தவாதத்வ கல்பனம் உசிதமாகுமா? அப்படியாகில் மற்ற விடங்களிலுமிவ்வாறான அதிப்ரஸங்க முண்டாகாதா? ஒருவாறு பொருந்துவதானாலும் உபாகர்ம பிரகரணத்திலிருக்கும் விசேஷ நிஷேதத்திற்கு ஒருஸமயம் ஏகவாக்யதை ஸம்பவித்தாலும் விரதஸாமான்யங்களை யுத்தேசித்து பிரவிருத்தமான ஸாமான்ய நிஷேதவாக்யங்களுக்கு எவ்வாறு ஔதயிக நியமவிதிவாக்யத்துடன் ஏகவாக்யதை ஸித்திக்கும். அவ்வாறே அங்கு கூறிய விதிமஹநாவிரஹம் பூர்வ தினம் எடுத்துக்கொள்ளத் தகுந்ததென்றது சுத்தபர்வ விஷயமாகலாமென உபபாதித்தரீதியில் நிஷேதோல்லங்கனமில்லையானதாலும் அவ்வாறே மறுதினத்தை காலமாக கல்பிக்கும்போதும் ஔதயிக சப்தார்த்தம் பரிபாஷிதமான்படியில்லாவிட்டாலும் ‘உதயஸம்மவோ ஹ்யவஸ்தாப்தி: உபவஸ்தா’ என்று நிர்ணயஸிந்து முதலியவற்றில் கூறியபடி உதயஸங்கவோபய வியாப்திரூப கௌணார்த்தலாபத்தால் ஸர்வாத்மனா அஔதயிகநிஷேதத்திற்கும் உல்லங்கனமில்லையானதாலும் விதிமஹநாவிரஹம் பிரவர்த்தியதென்றும் தோன்றுகிறது. முன்கூறியபடி அஔதயிக நிஷேதவிதியை ஔதயிகத்திலேயே உபாகர்மம் செய்யவேண்டுமென்கிற விதிக்கு சேஷபூதமெனத்தான் கொள்ளலாகாதே? ஆகையால் வசனவிசேஷார்த்தத்தை யுக்தியால் மட்டும் நிரஸிப்பது யுக்தமாகுமா? பூர்வதினம் சதுர்த்தசி ஸம்பந்தத்தால் விலக்கப்பட்டும் மறுதினம் பரிபாஷிதமான ஔதயிகத்வமுமில்லாமலிருக்குங் காலத்தில் ஸர்வதாநிஷித்தமான பூர்வதினத்தில் அனுஷ்டிப்பதைவிட கௌணமான ஔதயிக பர்வத்தில் அனுஷ்டிக்கலாகாதோ? இப்பக்ஷத்தில் அஔதயிக நிஷேதத்திற்கு ஸர்வதாதியாகமில்லை. சதுர்த்தசி ஸம்பந்தத்தால் நிஷித்தமாயும் ப்ராதஸ்ஸம்மவவ்யாப்தியுமில்லாத பர்வதினமான பூர்வதினத்திலும் அனுஷ்டானம் ஏற்படவில்லை என்பதேயாம்.

இவ்வருஷத்தில் மாத்திரமன்றிக்கே இச்சந்தேகம் இனியென்றைக்குமே உதியாவண்ணம் நிர்த்தாரணம் செய்யக்கூடிய ஸ்வாமிகள் நிர்த்தாரணம் செய்து உபகரிக்க வேண்டுமெனக் கருதி இவ்விஷயம் வேதாந்ததீபிகையில் பிரசுரிக்குமாறு அப்பத்திராதிபரை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

வேதாந்த சிரோமணி தோட்டாலம் கோமாண்டூர் இளையவல்லி
வேணுகோபாலாசார்யர்.



## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

### ஸித்தாந்தப் ப்ரவசனத்திற்கு ஏற்பாடு

சென்னை, செங்கல்பட்டு, வடஆற்காடு ஜில்லாக்களில் நமது ஸித்தாந்தத்தை ப்ரவசனஞ்செய்யவும் பல பாகங்களிலுமுள்ள ஆஸ்திக ப்ரமுகர்கள் நமது ஸபையை ஆதரிக்குமாறு விஜ்ஞாபித்துக் கொள்ளவும் ஸபையின் நிர்வாஹ கமிட்டியார் இப்பொழுது தீர்மானஞ் செய்திருக்கின்றனர். குடவாசல் வித்தியா ரத்நாகரம் ஸ்ரீ உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி அநந்யப்ரயோஜனமாக ஸபையின் உபந்யஸகராக ஆங்காங்கு சென்று மத உபந்யாஸங்கள் செய்வதாக கிருபையுடன் இசைந்திருக்கிறார். இந்த ஜில்லாக்களிலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நமது ஸம்ப்ரதாயஸ்தர்கள் இவ்விஷயத்தைத் திருவுள்ளம்பற்றி ஆங்காங்கு உபந்யாஸங்களுக்கு ஏற்பாடு செய்யச் சிறிது ப்ரயத்நம் எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஸித்தாந்த ப்ரவசனத்தை ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் உகக்க நடத்துவது ஸபைக்கு ஸாத்யமாகும். எல்லா ஆஸ்திக சிரோமணிகளும் இந்தப் பிரயத்நம் நிறைவேறுமாறு ஸஹாயம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது. உபந்யாஸங்களுக்கு ஏற்பாடுசெய்யும் ஸ்வாமிகள் கிருபைசெய்து முன்னதாக ஸபைகார்யதர்சிக்கு அறிவித்தால் ஸௌகர்யமாக விருக்கும்.

கார்யதர்சி. ஸ்ரீ வை. ஸி. ஸபை.

## ஸ்ரீ. வை ஸி. ஸபையின் க்ருதஜ்ஞதை.

சென்ற சித்திரை-மீ ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தை அத்யந்தம் திருப்திகரமாக நடத்தி வைத்த ஆஸ்திக சிரோமணிகளுக்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஹார்த்தமான க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். மஹாஸங்கம் மிகுந்த வைதிகச்ரீயுடன் வெகு நன்றாக நிறைவேறியதுபற்றி மஹாஸங்கத்திற் கெழுந்தருளியிருந்த ஸ்வாமிகளும் மற்றும் அதைப்பற்றிக் கேள்விப்பட்ட ஸஹ்ருதயர்களும் ரொம்ப ஸந்தோஷித்தார்கள். இப்பெரிய கைங்கர்யத்தை இவ்வளவு பரிஷ்காரமாக நடத்திய ஸ்வாமிகள் ஸ்ரீசரண்யனுடைய கிருபையால் பல்லாண்டுபல்லாண்டாக எழுந்தருளியிருந்து அவர்கள்மூலம் நமது ஸபையும் ஸித்தாந்தமும் அபிவிருத்தமாகவேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

ஸத்கார ஸபை அத்யக்ஷகராயிருந்து ஸமஸ்த ஏற்பாடுகளையும் செய்த ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமிக்கும், ஸத்கார ஸபை கார்யதர்சியாகயிருந்து ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி ஸ்வாமிக்கு உதவியாக வெளியிடங்களிலிருந்து எழுந்தருளிய ஸ்வாமிகளை நேரில் விசாரித்து ஸமஸ்த ஸௌகரியங்கள் செய்துகொடுத்தும், ஸதஸ்ஸின் மூன்றாவது தினத்தில் விசேஷ த்ரவ்யம் செலவழித்து ததீயாராதனம் செய்வித்தும், ஸ்வாமிகள் ஸம்பாவனைக்காக உதவிபுரிந்தவருமான அய்யங்கார் தெரு ஸ்ரீ. உப. குமட்டித்திடல் ஜீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும், ஸதஸ் இரண்டாவது தினத்தில் விசேஷ த்ரவ்யம் செலவழித்து ததீயாராதனம் செய்வித்து, தமது அசக்தியையும் பாராது ஸதஸ்ஸுக்கும் எழுந்தருளியிருந்து அதை நடத்திவைத்த உபதானத் தெரு ஸ்ரீ. உ. வே. குப்புஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும், ஸ்ரீ. உப. சக்ரவர்த்திஸ்வாமி அபிப்பிராயப்படி ஸதஸ் காரியங்களையும் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் உத்ஸவங்களையும் காலாகாலத்தில் ரொம்ப விமர்சையாக நடத்திவைத்த திருக்குடந்தை வங்கீபுரம் கே. பி. நரஸிம்மாசார்யர் ஸ்வாமிக்கும், அவருடைய ஸகோதரர் ஸ்ரீ. உப. கே. பி. வரதாசார்யர் ஸ்வாமிக்கும், ததீயாராதனத்திற்கு த்ரவ்ய ஸகாயம் செய்து நேரிலும் வந்திருந்து ஸதஸ்ஸை நடத்தி வைத்த, பட்டு நூல் பெரிய தெரு, மைசூர் ம-ா-ா-ஸ்ரீ வெங்கடாசலபதி ஐயர் அவர்களுக்கும், கபிஸ்தலம் எஸ்டேட் பிரபல மிராசுதார் மகா-ா-ா-ஸ்ரீ ரெங்கஸாமி மூப்பனார் அவர்களுக்கும், பொதுவாக எல்லாக்காரியங்களிலும் ச்ரத்தையுடன் உதவி புரிந்து த்ரவ்ய வசூல் செய்து கொடுத்த சுக்காம்பாளையத்தெரு, கண்டிராக்டர் ஸ்ரீ. உ. வே. மாடபூசி திருவழக்குடி சேஷ அய்யங்கார் ஸ்வாமிக்கும் முக்யமாக ஸபையின் கிருதஜ்ஞதையை தெரிவித்துக் கொள்ளுகிறேன். கார்யதர்சி. ஸ்ரீ வை. ஸி. ஸபை.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**மடாதிபதிகளின் தர்மம்.**

காஞ்சிபுரத்தில் ப்ரசுரம் செய்யப்படும் "மஞ்ஜுபாஷிணி" என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையின் ஸம்பாதகர், சென்ற ஆடிமாஸம் 21உயில் ப்ரசுரம் செய்யப்பட்டுள்ள பத்ரிகையில் மடாதிபதிகளின் தர்மத்தைப் பற்றிச் சில விஷயங்களை ப்ரஸ்தாவித்திருக்கிறார். அந்த ப்ரஸ்தாவத்தை ஸங்க்ரஹித்து நமது தீபிகையின் மற்றொரு பக்கத்தில் நாம் வெளியிட்டிருக்கிறோம். நமது ஸித்தாந்தம் காலவைகுண்யத்தால் வர வர லுப்தப்ராயமாகப் போவதைப்பற்றிச் சோகித்து, அந்தப் பத்ராதிபர், அம்மாதிரி லோபத்தை வரவொட்டாமல் தடுப்பதற்கு அபேக்ஷிதமான சக்தி முதலியவற்றை யுடைய நமது மடாதிபதிகள் அது விஷயமாக உதாஸீநர்களாக இருக்கிறார்களே என்று வருந்துகிறார். உண்மையாகவே, நமது ஸித்தாந்தத்திற்கும் நமது ஆசாரங்களுக்கும் இப்பொழுது ஸம்பவித்திருக்கும் துஸ்திதி, ஆஸ்திகர்களான நிரூபகர்களுக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. நமது பாலர்களுள் அநேகர் நமது மதத்திலிருந்து விமுகர்களாகப் போவதை நாம் ப்ரதிதிநமும் பார்க்கிறோம். நமது மதஸ்தர்களுள் பாமரர்களான பலர் ப்ரதி ஸம்வத்ஸரத்திலும், நமது மதத்தை த்யஜித்துவிட்டு, கேவலம் ஐஹிக லாபத்தை உத்தேசித்து மதாந்தரத்தில் ப்ரவேசிக்கிறார்கள். அநேக மதாந்தர வித்வான்கள், அபிநிவேச க்ரஸ்தர்களாய், நமது மதத்தின் மீது அபூதங்களான தோஷங்களை ஆரோபணம் செய்து, நமது மதத்தைத் தூஷித்து அநேக புஸ்தகங்களை அடிக்கடி எழுதி ப்ரசுரம் செய்கிறார்கள்; வஸ்து ஸ்திதியைச் சரியானபடி அறியாமலிருக்கும் அநேக ஸாமாந்ய ஜநங்



கள், அம்மாதிரியான புஸ்தகங்களைப் படித்து, பாஷா பலத்தாலும் வாக்சரியாலும் ஆகர்ஷிக்கப்பட்டவர்களாய், நமது மதத்தில் உண்மையாகவே எவ்வித குணபாகமும் இல்லையென்றே ப்ரமிக்கிறார்கள். இவையெல்லாம் அதிமாத்ரம் சோசநீயங்களே.

இவ்விதம் நமது ஸித்தாந்தத்திற்கு நேர்ந்துள்ள கஷ்டதசையை நிவாரணம் செய்ய நாம் எல்லாரும் கடமைப்பட்டவர்கள். சாச்வதமான ச்ரேயஸ்ஸை அடைவிப்பிக்கும் ஸாதுவான மார்க்கத்தை நமது மதம் உபதேசிக்கின்றது என்று நம்பி இருக்கும் நாம், அப்படிப்பட்ட நம்பிக்கையின்றிக்கு அலமந்து வழிதப்பி ப்ரவ்ருத்திக்கும் நமது ஜநங்களை ஔதாஸீந்யத்துடன் பார்த்து வருவது ஒருகாலும் ந்யாய்யமாக மாட்டாது. ஸாதநம், ஜ்ஞாநஸம்பத் அர்த்தஸம்பத் முதலிய ஸாமக்ரிகளைப் பூர்ணமாகப் பெற்றும், வேறு எவ்வித வ்யாபாரமுமில்லாமல் இதற்காகவே ஸ்ரீசரண்யனால் நியமிக்கப்பட்டும், மஹாஜநங்களால் ஆசார்யராக வரிக்கப்பட்டுமுள்ள மடாதிபதிகள் விஷயத்தில் இந்த ஔதாஸீந்யம் தென்பட்டால், அது, நிரம்பவும் தோஷத்திற்கு ஹேதுவாகும் என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை.

அப்படிப்பட்ட ஔதாஸீந்யம் நமது மடாதிபதிகளிடம் ஏராளமாகத் தென்படுகின்றது என்பது 'மஞ்ஜுபாஷிணி' பத்ராதிபரின் அபிப்ராயம். "ஶ்லாகநீயை: அப்ரமேயதநராஶிபி: மடாதிபதிபி: மஹாபாகை: கிம் கிமாசரிதம் கார்யம் ஸித்தாந்தஶ்ரத்தாஸூசகம் இதி விசாரணே கிம் வா ப்ரதிவசநம் ஸம்பததீதி ந ஜாநீம:" [அளவற்ற தநக் குவியல்களையுடைய பெரிய அத்ருஷ்டசாலிகளான நமது மடாதிபதிகள் தமக்குள்ள ஸித்தாந்த ச்ரத்தையை ஸூசிப்பிக்கும்படி என்ன கார்யம் அநுஷ்டித்து வருகிறார்கள் என்பதை விசாரிக்கும்பொழுது என்ன நிர்ணயம் ஏற்படுகின்றது என்பது நமக்குத் தெரியவில்லை] என்று அப்பத்ராதிபர் எழுதியிருக்கிறார். இப்படிச் சொல்வது கொஞ்சம் அத்யுக்தி என்றே நமக்குத் தோன்றுகிறது. ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீ வானமாமலை மடம், ஸ்ரீ பரகால ஸ்வாமி மடம், ஸ்ரீ சங்கராசார்யர் மடங்கள் இவை முதலிய அநேக மடங்களுக்கு அதிபதிகளாக இருக்கும் ஸாத்விகாக்ரேஸரர்கள், க்ரந்தகாலக்ஷேப முகமாகவும் விஷய விசார ரூபமாகவும் ஸாக்ஷாத் உபதேசரூபமாகவும் ஸித்தாந்த அபிவ்ருத்தியை மிக்க ஊக்கத்துடன் செய்து வருகிறார்கள் என்றே நாம் நினைக்கிறோம். நாலைந்து மாஸ காலமாகத் திருவல்லிக்கேணியில் ஸ்ரீவானமாமலை ஸ்வாமி, நூற்றுக்கணக்கான ஜநங்களுக்கு ப்ரதிதிநம் திவ்ய ப்ரபந்த காலக்ஷேப முகமாக அநேக தத்வ விஷயங்களை எல்லாரும் ஆநந்திக்கும்படியும் பூர்ணமான

த்ருப்தியை அடையும்படியும் உபதேசித்து வருகிறார். இம்மாதிரி இதர மடங்களிலும் அநேக ஸதுபதேசங்கள் நடைபெற்று வருகின்றன. இவை யெல்லாம் ஸித்தாந்த ச்ரத்தையை ஸூசிப்பிக்கும் கார்யங்களல்லவா?

ஆனால், இம்மாதிரி ப்ரயத்நங்கள் இக்காலத்திற்குப் பர்யாப்தமா வென்று ஒரு ப்ரச்நம் செய்யலாம். இவை அபர்யாப்தங்களே. கால பலத்தால் ஜநங்களுக்கு அர்த்த காமபரதை அதிகரித்திருக்கின்றது. அதனால் ஆத்ம மார்க்கத்திலிருந்து அவர்கள் அதிமாத்ரம் விமுகர்களாய் வர்த்தித்து வருகிறார்கள். எல்லைக்கு மீறி ஐஹிக ஸுகங்களைத் தேடுகிறவர்களாய், சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள நியமங்களைத் தூஷித்துக்கொண்டு, மனம் போன போக்கை ஆதரித்து உபதேசிக்கும் அநபிஜ்ஞர்களைக் கொண்டாடி, அதன் வழியாகத் தமது ஆத்ம நாசத்தை ஸம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். அப்படி உபதேசிக்கும் அநபிஜ்ஞர்களும் பஹுவாகக் காணப் படுகிறபடியால், ஸந்தர்ப விசேஷங்களைப் பார்த்து நமது மடாதிபதிகள் உபதேச விஷயத்தில் புதிதான மார்க்கங்களைக் கைப்பற்ற வேண்டியது அவச்யமாகின்றது. இனி கேவலம் க்ரந்தகாலக்ஷேப கோஷ்டியால் மாத்ரம் த்ருப்தி அடைவது உசிதமாகமாட்டாது; பண்டிதர்களைக் கொண்டு பஹுவாக உபந்யாஸங்களைச் செய்விக்க வேண்டும்; ஆழ்வார் ஆசார்யர்கள் எம்பெருமான் இவர்களுடைய மஹோத்ஸவ காலங்களில் கேவலம் *ததீயாராதந மஹிமையுடனும் வேத பாராயண திவ்ய ப்ரபந்தாத்யயநங்களுடனும் தம்மை க்ருத க்ருத்யராக எண்ணிவிடாமல், மஹா ஜநங்களுக்கு ஜ்ஞாந ஜநகமாகும்படி சில உபாய விசேஷங்களையும் அநுஷ்டிப்பிக்க வேண்டும்; நமது ஸித்தாந்த விஷயமான ஜ்ஞாநத்திற்கு மூலகாரணமாயுள்ள ஸம்ஸ்க்ருத பாஷையின் அபிவ்ருத்திக்கு வேண்டுவனவான ஸகல ஸம்விதாநங்களையும் செய்யவேண்டும்; ஸ்ம்ருதி முதலான சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுள்ள நியமங்களின் ஸாராம்சத்தை அதிக்ரமியாமலே காலதேசங்களுக்கு அநுகுணமாகவும் மஹா ஜநங்களுக்கு உபகாரகமாகவும் தத்வ ஜ்ஞாநத்தின் ப்ரசாரத்தைச் செய்ய முயலவேண்டும்; இந்த முயற்சிகளில் ஒரு ப்ரகாரத்திலும் அர்த்த வ்யயத்தைப் பற்றி கொஞ்சம் கூட ஆலோசிக்கக் கூடாது. இதுதான் ஹிதபரரான மஞ்ஜுபாஷிணி பத்ராதிபருடைய கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை ப்ரசுரிப்பதில், அந்தப் பத்ராதிபர், நிர்வேதத்தாலோ வேறு என்ன காரணத்தாலோ, கொஞ்சம் மர்யாதையை மீறி ந்யாயத்திற்கும் உண்மைக்கும் விருத்தமாயுள்ள சில வாக்யங்களை எழுதி யிருக்கிறார். சில நிந்த்யதமர்களான அநபிஜ்ஞ ஸந்யாஸிகள் மடாதிபதி என்னும் வேஷத்தைப் பூண்டு வைஷயிக ஸுகங்களில் நிர்லஜ்ஜர்களாக ப்ரவ்ருத்தித்தால், அவர்களை இதர ஸாதுக்களான மடாதிபதிகளுடன் சேர்த்துப் பேசு



வதும், அவர்களின் தோஷங்களை ப்ரஸ்தாவித்து ஸாமாந்யமாக 'மடாதிபதிக ளெல்லாரும் அம்மாதிரி நடவடிக்கைகளை உடையவர்களாக இருக்கிறார்கள்' என்று த்யோதிப்பிப்பதும் ஸர்வதா அநுசிதமே. ஸ்ரீதேசிகன் நாடகத்தில் ஸபாரஞ்ஜநார்த்தம் அநுக்ரஹித்துள்ள ச்லோகத்தை உதாஹரித்து, 'இக்காலத்திய மடாதிபதிகளெல்லாரும் அந்த ச்லோகத்திற் சொல்லப்பட்டுள்ள தோஷங்களுக்குப் பாத்ரமாகிறார்கள்' என்பதை ஸூசிப்பிக்கும்படித் தமது விசாரத்தை உபஸம்ஹரிப்பதை யாராவது ந்யாயத்திற்கு ஒத்ததென்று அங்கீகரிப்பார்களோ? இம்மாதிரியான ஆக்ஷேபார்ஹங்களான அம்சங்களை விலக்கி விட்டு, அப்பத்ராதிபரால் சொல்லப்பட்டுள்ள மற்றை அம்சங்களை மாத்ரம், 'ஸாரமயெ க்ஷாழ' என்னும் ந்யாயப்படிக்கு ஸ்ரீமடாதிபதிகளின் மனத்தில் நாம் வற்புறுத்தத் துணிகின்றோம். ரஸிகர்களாகவும் ஸாத்விகர்களாகவுமுள்ள அம்மடாதிபதிகள் அந்த அம்சங்களை யதோசிதம் கவனிப்பார்களென்பது நமது நம்பிக்கை.

* * *

**லாடேரி** சென்ற ஆனிமாஸத்திய தீபிகையில் லாடேரி சீட்டுப் போடுவதன் தர்மாதர்மங்களைப் பற்றியும், அதனால் கிடைக்கும் த்ரவ்யத்தைக் கொண்டு பகவத் கைங்கர்யம் முதலிய ஸத்கர்மங்களைச் செய்வதன் ஸாத்வஸாதுத் தன்மையைப் பற்றியும் நாம் விசாரித்திருந்தோம். நமது சாஸ்த்ரம், அம்மாதிரியான கர்மங்களை ஸத்கர்மங்களென்று ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதே நம்முடைய அபிப்ராயம். நமது விசாரத்தைக் கண்ணுற்ற 'ஹரிஸமயதிவாகரம்' 'மஞ்ஜுபாஷிணி' இந்தப் பத்திரிகைகளின் ஸம்பாதகர்கள், நாம் சொல்வது தவறுதலான வார்த்தை என்றும், லாடேரியில் அதார்ம்யமான அம்சமில்லை யென்றும், அப்படியே அது அதார்ம்யமானது என்று ஒத்துக்கொண்டாலும் அதன் பலம் ஸத்கார்யத்தில் பர்யவஸிக்கிறபடியால் உபாயத்தின் அதார்மத் தன்மை தோஷாவஹமாகாதென்றும் அபிப்ராயப்பட்டு, அந்த அபிப்ராயத்தைத் தமது பத்ரிகை மூலமாக வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு நிதர்சநமாக ஸ்ரீ திருமங்கை மன்னன் சரித்ரத்தை அவர்கள் உதாஹரித்தும் இருக்கிறார்கள்.

இதைப் பற்றி அதிக சர்ச்சை செய்ய நமக்கு அபிப்ராய மில்லை. ஆனாலும், இந்த விஷயத்தைப் பற்றிப் பர்யாலோசிக்கும் நிஷ்பக்ஷபாதிகளான பர்யபீருக்களுக்கு ஒரு விஷயத்தை மாத்ரம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளத் துணிகின்றோம். திருமங்கை மன்னனைப் போன்ற வ்யக்தி விசேஷங்களுடைய சரித்ரம் நம்முடைய அநுஷ்டாநத்திற்கு ப்ரமாணமாக மாட்டாது. அப்படிப்பட்ட மஹான்களுடைய வ்யதிக்ரமத்தை வ்யக்தி விசேஷ நியதமென்றே நாம் அங்கீகரிக்கவேண்டும். அப்படி அங்கீகரியாவிடில் நமது சாஸ்த்ரத்தின் வ்யவஸ்தையே குலைந்துவிடும்; தர்ம ஸாங்கர்யத்துக்கும் ப்ர

ஜைகளின் உபஹதிக்கும் நாம் காரணமாகிவிடுவோம். அது ஸர்வதா அநிஷ்டமே. தவிரவும், உண்மையான பகவத் பக்தியும் பகவதாஜ்ஞா திலங்கந ரூபமான சாஸ்த்ர வ்யதிக்ரமமும் ஒரே இடத்தில் இருக்கமாட்டா என்பது நமது உறுதியான எண்ணம். இக்காலத்திய சட்டமும், அம்மாதிரியான வ்யதிக்ரமத்திற்கு நாம் அதிகாரிகளல்லர் என்பதை நன்றாக உணர்த்துகின்றது. லாடெரியில் அதர்மாம்சம் இருக்கின்றது என்பதற்கு லாடெரியை ஸாமாந்யமாக நிஷேதிக்கும் நமது ராஜாஜ்ஞையே போதுமான நிதர்சநம்.

இவ்வளவுதான் நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம். ஒருகால் இந்த நிர்ணயத்தில் நாம் ப்ரமித்திருக்கலாம். தர்மாதர்ம நிர்ணயம் மிகவும் துஷ்கரம். பெரியோர்களின் நிர்ணயத்தையே நாம் தர்மமாக அங்கீகரிக்கவேண்டுமென்று நமது சாஸ்த்ரம் போதிக்கின்றது. தவிரவும் பகவானுடைய விசித்ர சக்தி சில ஸமயங்களில் தர்ம்யமான கார்யத்தையும் நய விருத்தம் போலத் தோற்றுவிக்கும். இம்மாதிரியான காரணங்களால் தர்ம ஸம்சயவிஷயங்களில் பெரியோர்களே ப்ரமாணம் என்று எண்ணி நாம் வணங்கிப்போக ஸந்நத்தராக இருக்கிறோம். இதன் சர்ச்சையிலிருந்து இனி நாம் விரதராகவும் விலகுகிறோம்.

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவ ஞு புரட்டாசி மீ (1927 ஸெப்டம்பர்—அக்டோபர்.)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸெப்ட | 17 | புரட் | 1 | ச. | ஸப். | 49-33 | ரோ. | 42-59 | அஹஸ் | 30-15 | சூன்ய திதி. கந்யாஸங்க்ரமணம். |
| ,, | 18 | ,, | 2 | ஞா. | அஷ். | 46-44 | மிரு. | 41-49 | ,, | 30-13 | மத்யாஷ்டமி. |
| ,, | 21 | ,, | 5 | பு. | ஏகா. | 45-21 | பூச. | 45-11 | ,, | 30-8 | ஏகாதசி. |
| ,, | 25 | ,, | 9 | ஞா. | அமா. | 60-0 | உத். | 60-0 | ,, | 30-0 | மஹாளய அமா. |
| ,, | 30 | ,, | 14 | வெ. | சது. | 19-6 | விசா. | 30-3 | ,, | 29-48 | பஞ்சமி திதி. |
| அக்டோ | 1 | ,, | 45 | ச. | பஞ். | 21-34 | அனு | 33-49 | ,, | 29-48 | அதிதி |
| ,, | 2 | ,, | 16 | ஞா. | ஷ. | 23-2 | கேட். | 36-40 | ,, | 29-45 | ஷஷ்டி திதி ஸ்ரீ ஆதிவண் சடகோப திரு. |
| ,, | 4 | ,, | 18 | செ. | அ. | 21-39 | பூரா. | 37-52 | ,, | 29-40 | அஷ்டமி நவமி திதிகள். |
| ,, | 5 | ,, | 19 | பு. | ந. | 19-12 | உத். | 36-59 | ,, | 29-40 | மஹா நவமி தசமி திதி. |
| ,, | 6 | ,, | 20 | வி. | த. | 15-33 | திரு. | 34-46 | ,, | 29-38 | விஜய தசமி. ஸ்ரீ தேசிகன் திரு. |
| ,, | 7 | ,, | 21 | வெ. | ஏ. | 11-13 | அவி. | 31-58 | ,, | 29-35 | ஏகாதசி வ்ரதம் |
| ,, | 16 | ,, | 20 | ஞா. | ஷ. | 20-29 | ம்ரு. | 1-39 | ,, | 29-20 | ஷஷ்டி ஸப்தமி திதிகள். |
| ,, | 17 | ஐப்ப. | 1 | தி. | ஸப். | 18-54 | திரு. | 1-22 | ,, | 29-16 | துலா ரவி. 24-0. துலா க்ருஷ்ண அஷ்டமி. |



யதா "ப்ராஜ்ஞவத்" "ப்ரஹ்மணா விபஶ்சிதா" "ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" இதி ஸர்வஜ்ஞஸ்ய ஜ்ஞாந குண ஸாரத்வாத் "ஸத்யம் ஜ்ஞாநம்" இதி வ்யபதிஶ்யதே। "யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷ:" இதி ச ஸூத்ரகார:। ஜ்ஞாநேந தர்மேண ஸ்வரூபமபி நிரூபிதம் ந து

---

குணத்தை ஸாரமாக உடைத்தாயிருக்கிறபடியால், ஆத்மாவுக்கு 'ஜ்ஞாநம்' என்றே வ்யபதேசம் ஏற்படுகின்றது. ச்ருதியில் ஆத்மாவானது 'ப்ராஜ்ஞன்' என்றும், 'விபச்சித்தான ப்ரஹ்மம்' என்றும், 'ஸர்வஜ்ஞன்' என்றும், 'ஸர்வவித்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? ஸர்வஜ்ஞனாக இருப்பவனுக்கே ஜ்ஞாநம் என்னும் குணத்தை ஸாரமாக உடைத்தாயிருக்கும் தன்மை ஸம்பவிக்குமாதலால், அப்படி ஸர்வஜ்ஞனாக இருக்கும் அந்த ஆத்மா 'ஜ்ஞாநம்' என்றும் 'ஸத்யம்' என்றும் வ்யபதேசிக்கப்படத் தகுந்தது. இப்படி வ்யபதேசிப்பதில் 'லக்ஷணை' என்னும் தோஷம் வாராது என்று ஸூத்ரகாரர் "யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷ:" என்னும் ஸூத்ரத்தில் உபபாதித்திருக்கிறார்.

---

தத்குண ஸாரத்வாத்—இது வ்யாஸ ஸூத்ரம். இது, இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது பாதத்தில் 29-வது ஸூத்ரமாகக் காணப்படுகின்றது. இதன் அர்த்தம்: "ஜீவே விஜ்ஞாந குணஸ்யைவ ஸாரபூதகுணத்வாத் விஜ்ஞாநமிதி ஜீவோ வ்யபதிஶ்யதே" (ஜீவனிடத்தில் விஜ்ஞாநமென்னும் குணமே ச்லாக்யமான குணமாக இருக்கிறபடியால் அந்த ஜீவன் விஜ்ஞாநமென்றே பேசப்படுகிறான்); ப்ராஜ்ஞவத்—ப்ராஜ்ஞன் போல என்பது த்ருஷ்டாந்தம். அதாவது-'ப்ராஜ்ஞனாகிற ப்ரஹ்மம் ஆநந்தகுணத்தை ஸாரமான குணமாக உடைத்தாயிருக்கிறபடியால் எப்படி ஆநந்தமென்றே வ்யபதேசிக்கப்படுகிறதோ அப்படியே' என்று சொன்னதாயிற்று.

யாவதாத்மபாவித்வாத்—ஒருகால், லோகத்தில் தர்மத்தைச் சொல்லும் சப்தங்களுக்கு அந்தத் தர்மத்தை உடைய வஸ்துக்கள் பர்யந்தம் லக்ஷணையால் எப்படி தாத்பர்யம் சொல்லுகிறோமோ அப்படியே இவ்விதத்திலும் லக்ஷணை ஏற்படுகின்றதோ என்று சங்கித்து, 'அப்படி லக்ஷணை இல்லை; இதைச் சக்யார்த்தமென்றே சொல்லவேண்டும்' என்பதை விளக்க "யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷ:" என்னும் மற்றொரு வ்யாஸ ஸூத்ரத்தை (2-3-30) உதாஹரிக்கிறார். ஸூத்ரத்தின் அர்த்தமாவது—"யதா கோத்வாதீநாம் யாவத்ஸ்வாஶ்ரயவ்யக்திபாவிநாம் ஜாதீநாம் கவாதி ஶப்தை: வ்யக்தி நிர்தேஶோ த்ருஶ்யதே, ஏவமேவ ஜ்ஞாநஸ்யாபி யாவதாத்மபாவித்வாத் தத்ஶப்தேந யதிர்ணோ வ்யபதேஶோ ந தோஷாய" (பசுவினிடத்தில் பசுத்தன்மை என்பது பசு இருக்கும் வரையில் இருக்கின்றது; அந்தக்

ஜ்ஞாநைகாகாரம் ப்ரஹ்ம। கதமிதமவகம்யத இதி சேத் “ய꞉ ஸர்வஜ்ஞ꞉ ஸர்வவித்” இத்யாதி ஜ்ஞாத்ருத்வ ஶ்ரவணாத்। “பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச”, “விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்” இத்யாதி ஶ்ருதிஶத ஸமதிகம்யம்। ஜ்ஞாந

---

